Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 சித்திரை 30 திங்கட்கிழமை (12.05.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 168

# பயங்கரவாதத்தைத் தோற்கடிக்க கிழக்கு மக்கள் தெளிவான ஆணை!

## தேர்தல் மூலம் தந்துவிட்டனர் என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, மே 12

பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதற்கு கிழக்கு மாகாண மக்கள் தெளிவான ஆணையை அரசுக்குத் தந்திருக்கிறார்கள். அதன் மூலம் சமாதானத்தை வலுப்படுத்தவும் நாட்டை அபிவிருத்தி செய்யவும் அவர்கள் அனுமதி வழங்கியுள்ளனர்.

நேற்று நடைபெற்ற கிழக்கு மாகாணத் தேர்தல் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்த உத்தியோகபூர்வ அறிக்கையில் மேற்கண்டாவறு பெருமிதம் தெரிவித்துள்ளார்.

இந்நாட்டில் வாழும் சகல மக்களும் தமது ஜனநாயக உரிமைகளை அனுபவிக்கவும் சுதந்திரமாகவும் சமாதானமாகவும் வாழ்வதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்ற அரசாங்கத்தின் கொள்கையையும் கிழக்கு மக்கள் தேர்தல் ஊடாக நிலைநிறுத்தியுள்ளார்கள் - என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

கிழக்கு மாகாணத்தில் ஏற்கனவே அரசு ஆரம்பித்துள்ள அபிவிருத்தித் திட்டங்களுக்கும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளை மீட்டு அங்கு ஜனநாயகத்தையும் இயல்பு நிலையையும் தோற்றுவிப்பதற்கு அரசு எடுத்த நடவடிக்கைகளுக்கும் மக்கள் அளித்துள்ள அங்கீகாரத்தையே கிழக்கு மாகாண சபைக்கான இந்த முதல் தேர்தல்களின் முடிவுகள் எடுத்துக்காட்டுகின்றன.

இவ்வருடம் மார்ச்சில் மட்டக்களப்பு மாவட்டத்தில், உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்கள் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுவிட்டன. இது இலங்கை முழுவதிலும் ஜனநாயகத்தை உத்தரவாதப்படுத்துவதற்கும், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள்ளிருந்த பகுதிகளில் வாழும் மக்களின் ஜனநாயக உரிமைகளை மீள நிலை நிறுத்துவதற்குமான அரசின் கொள்கையில் பிறிதொரு முக்கிய மைல் கல்லாகும்.



இத்தேர்தல்களில் பங்குபற்றிய கிழக்கு மாகாண வாக்காளர்கள், தங்கள் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதில் தங்களுக்குள்ள ஆர்வத்தை அமைதியாகவும், பெருமளவில் இணைந்தும் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். பயங்கரவாத சக்திகளால் இந்த உரிமைகள் ஏறத்தாழ இரு தசாப்தங்களாக மறுக்கப்பட்டு வந்துள்ளன. கிழக்கு மாகாணத்தின் விடுதலையோடு இந்த உரிமைகள் பாதுகாப்புப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கு மாகாணத் தேர்தலில் அரசு-பிள்ளையான் கூட்டு வெற்றி!

### அரசுக்கு - 20; ஐ.தே.கட்சிக்கு - 15 இடங்கள்

கொழும்பு, மே 12

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கிழக்கு மாகாணத் தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியுடன் (பிள்ளையான் குழுவுடன்) அணி சேர்ந்து போட்டியிட்ட ஆளும் தரப்பு வெற்றி ஈட்டியதாக அறிவிக்கப்பட்டது.

அறிவிக்கப்பட்ட முடிவுகளின்படி ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு இரு போனஸ் ஆசனங்களுடன் சேர்ந்து மொத்தம் இருபது இடங்களைப் பிடித்து கிழக்கு மாகாண சபையில் அறுதிப் பெரும்பான்மையைச் சுவீகரித்துக் கொண்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிட்ட ஐக்கிய தேசியக் கட்சி 15 ஆசனங்களையும், ஜே.வி.பி. ஓர் ஆசனத்தையும் பெற்றன.

தமிழர் ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் ஒன்றிணைந்து போட்டியிட்ட - புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். (பத்மநாபா அணி), தமிழர் விடுதலைக் கூட்டணி (ஆனந்தசங்கரி அணி) ஆகிய - முக்கூட்டு அணிக்கு ஓர் ஆசனம் கிடைத்தது.

கிழக்கு மாகாணசபைக்கு உட்பட்ட மூன்று மாவட்டங்களில் திருகோணமலை மாவட்டத்தில் ஐ.தே.கட்சி வென்றது. மற்றைய இரு மாவட்டங்களான அம்பாறையிலும் மட்டக்களப்பிலும் ஆளும் தரப்பு வென்றது.

**திருமலை மாவட்டம்**

திருமலை மாவட்டத்தில் திருகோணமலை, மூதூர் தொகுதிகளில் வென்ற ஐ.தே.கட்சிக்கு அங்கு ஐந்து ஆசனங்கள் கிடைத்தன.

மற்றைய தொகுதியான சேருவிலவில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## உடன் நாடாளுமன்றைக் கூட்ட கோருகின்றது ஐ.தே.கட்சி!

கொழும்பு, மே.12

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் இடம் பெற்ற மோசடிகள் குறித்து ஆராய்வதற்காக உடனடியாக நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு சபாநாயகரைக் கோரப்போவதாக ஐ.தே. கட்சி நேற்றுத் தெரிவித்தது.

இன்னும் ஓரிரு நாட்களில் சபாநாயகரிடம் இந்த வேண்டுகோள் விடுக்கப்படும் என்ற ஐ.தே.கட்சி எம்.பியும் அக்கட்சியின் பொதுச் செயலாருமான திஸ்ஸ அத்தநாயக்க

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளிடம் ஐந்து 'சிலின்' ரக விமானங்கள் படையினரின் புலனாய்வுத் தகவல் ஊர்ஜிதம்

கொழும்பு,மே.12

விடுதலைப் புலிகள் வசம் ஐந்துக்கும் மேற்பட்ட 'சிலின் - 143' ரக விமானங்கள் உள்ளன எனப் படையினரின் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளதாக கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில வார ஏடு ஒன்று தெரிவித்துள்ளது.

மேலும், விடுதலைப் புலிகள் முல்லைத் தீவில் உள்ள தமது விமான ஓடுபாதையைப் புனரமைத்து வருகின்றனர் என்றும் -

அண்மையில் மணலாற்றுப் பகுதியில் புலிகள் நடத்திய விமான தாக்குதல் அதனையே தெளிவுபடுத்துகிறது என்றும் அது தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

இரணைமடுவிற்கு அருகில் உள்ள விமான ஓடுபாதையைத் தவிர அவர்கள் மேலும் மூன்று ஓடுபாதைகளை அமைத்துள்ளனர். 2005ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட புகைப்படங்களின் பிரகாரம் இரணைமடுவிற்கு தென்கிழக்காகவும், புதுக்குடியிருப்புப் பகுதியிலும் இரு விமான ஓடுபாதைகள் கண்டு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பொருளியல் ஆசிரியர் வரதராஜன் நேற்று முதல் காணாமல் போனார்

கொழும்பு, மே 12

பிரபல பொருளியல் பாட ஆசிரியரான வரதரா ஜனும் அவரின் மைத்துனரான சிறிதரனும் நேற்றுக் கொழும்பில் கடத்தப்பட்டிருக்கின்றனர்.

வெள்ளவத்தையில் உள்ள கொழும்பு தமிழ் சங்கத்தில் வகுப்பு எடுத்துவிட்டு புறக்கோட்டையில் உள்ள தனியார் கல்வி நிறுவனத்துக்கு வகுப்பு எடுக்கச் சென்றபோது நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் வரதராஜன் காணாமல் போயுள்ளார்.

முற்பகல் 11.00 மணியளவில் புறக்கோட்டையில் தாம் நிற்பதாகவும் எனவும் வீட்டுக்கு விரைவில் வருவார் எனவும் தொலைபேசியில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சட்ட நடவடிக்கைக்கும் தயாராகிறது ஐ.தே.கட்சி!

கொழும்பு, மே 12

தமது கட்சி கிழக்கு மாகாணசபைத் தேர்தல் முடிவுகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் இத் தேர்தல் மோசடிகள் தொடர்பாக மக்களுக்குத் தெளிவுபடுத்தப்போவதாகவும் ஐ.தே.கட்சியின் எம்.பியான லக்ஷ்மன் கிரியெல்ல கூறினார்.

நேற்றுக் கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

அரசு தனது கபடத் திட்டப்படி பாரிய வன்முறை, மோசடிகள் ஊடாக இத் தேர்தலில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஹிஸ்புல்லாவை விட பிள்ளையானுக்கு அதிக வாக்குகள்

கொழும்பு,மே 12

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்ட தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி வேட்பாளர் குழுத்தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்), அந்த மாவட்டத்தில் விருப்பு வாக்குகளில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## முதலமைச்சர் பதவி தனக்குக் கிடைப்பதற்கான சந்தர்ப்பம் அதிகம் என்கின்றார் பிள்ளையான்

"கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் முடிவுகளின்படி மட்டு. மாவட்டத்தில் அதிகளவிலான வாக்குகளை எனக்கு மக்கள் அளித்திருக்கிறார்கள். அந்த வகையில் முதலமைச்சர் பதவி எனக்குக் கிடைப்பதற்கான சந்தர்ப்பம் மிக அதிகமாகக் காணப்படுகிறது."

- இவ்வாறு கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஆளுங்கட்சி சார்பாகப் போட்டியிட்டு வெற்றியீட்டி விருப்பு வாக்குகளில் முதலிடம் பிடித்த தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் வேட்பாளர் குழுத் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) நம்பிக்கை வெளியிட்டார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வங்காலையில் வயோதிப மாது ஷெல்லில் காயம்

மன்னார், மே 12

மன்னார், வங்காலை இராணுவ முகாமுக்கு அருகில் உள்ள வீடு ஒன்றுக்கு முன்னால் நேற்றுமுன்தினம் இரவு 7.40 மணியளவில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் அந்த வீட்

(10 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏற்கவே முடியாத தேர்தல் முடிவு இதுவென ஐ.தே.கட்சி அறிவிப்பு

கொழும்பு, மே 12

ஊழல், மோடிகள் மூலமே அரசு கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளது என்றும், இத்தேர்தலின் முடிவுகளைத் தம்மால் ஏற்கவே முடியாது என்றும் ஐ.தே.கட்சி நேற்றுத் தெரிவித்தது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே.கட்சியின் பொதுச்செயலாளரும் எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்கவே இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் நீதியான முறையில் இடம்பெறவில்லை. வன்முறைகளின் ஊடாக - கள்ள வாக்குகளைப் போட்டே - அரசு இத்தேர்தலில் வெற்றி பெற்றிருக்கின்றது.

90இற்கு மேற்பட்ட வாக்குச்சாவடிகளில் வாக்களிக்க மக்கள் அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் ஆயுதக்குழுக்களால் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். அந்த வாக்குச்சாவடிகளில் அரசு கள்ளவாக்குகளைப் போட்டது.

தேர்தல் தினத்தன்று ஆயுதக் குழுக்கள் ஐ.தே.கட்சி வேட்பாளர்களின் வீடுகளுக்குச் சென்று வேட்பாளர்களைமிரட்டவும் செய்தன.

வாக்குச் சாவடிகளை நெருங்கவிடாமல் மக்கள் விரட்டியடிக்கப்பட்டனர். இத்தேர்தல் நீதியான முறையில் இடம்பெறவில்லை என்று இத்தேர்தலைக் கண்காணித்த அத்தனை கண் காணிப்புக் குழுக்களும் தெரிவிக்கின்றன.

அரசு நன்கு திட்டமிட்டு இந்த மோசடியைச் செய்துமுடித்துள்ளது.

விசேட அதிரடிப்படையினரின் முகாம்கள் கிழக்கில் இருந்து அகற்றப்பட்டமையே இந்த மோசடிகளை இலகுவாகச் செய்வதற்காகவேதான்.

அரசின் சொத்துக்களையும் அதிகாரத் தையும் பயன்படுத்தி அரசு 18 ஆசனங்களை மாத்திரம்தான் பெற்றுள்ளது. எதிர்க்கட்சி 17 ஆசனங்களைப் பெற்றுள்ளது. ஓர் ஆசனம் தான் வித்தியாசப் படுகிறது.

அரசு பலதரப்பட்ட வன்முறைகளில் ஈடுபட்ட போதிலும் அரசால் அமோக வெற்றியீட்ட முடியவில்லை.

இத்தேர்தல் நீதியான முறையில் இடம் பெறாததால் ஐ. தே.கட்சி இத்தேர் தல் முடிவுகளை ஏற்காது. இதற்கு நாம் எதிர்ப்புத் தெரிவிக்கிறோம் - என்றார்.

(உ-07)

## கிழக்கு மாகாணத் தேர்தல் முடிவுகள்

கொழும்பு, மே 12

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கிழக்கு மாகாணசபைத் தேர்தல் தொடர்பாக தேர்தல் திணைக்களம் வெளியிட்ட உத்தியோகபூர்வ முடிவுகள் வருமாறு:-

| கட்சி | வாக்குகள் | வீதம் | ஆசனங்கள் |
|---|---|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு | 308,886 | 52.21 | 20 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 250,732 | 42.38 | 15 |
| ஜே.வி.பி. | 9,390 | 1.59 | 01 |
| தமிழ் ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பு | 7,714 | 1.30 | 01 |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி | 5,418 | 0.92 | |
| ஐக்கிய சோசலிஸ்ட் கட்சி | 2,548 | 0.43 | |
| ஈழவர் ஜனநாயக் கட்சி | 2,275 | 0.38 | |
| ஐக்கிய தேசிய கூட்டு | 579 | 0.10 | |
| விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி | 383 | 0.06 | |
| அகில இலங்கை தமிழர் ஐக்கிய முன்னணி | 378 | 0.06 | |
| புதிய சிஹல உறுமய | 312 | 0.05 | |
| தேசிய அபிவிருத்தி முன்னணி | 189 | 0.03 | |
| சிங்கள மஹாசம்மத பூமிபுத்திரய கட்சி | 109 | 0.02 | |
| முஸ்லிம் விடுதலை முன்னணி | 39 | 0.01 | |
| ஸ்ரீலங்கா தேசிய முன்னணி | 30 | 0.01 | |
| ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி | 26 | 0.00 | |
| றுகுணு மக்கள் கட்சி | 14 | 0.00 | |
| லிபரல் கட்சி | 03 | 0.00 | |
| **செல்லுபடியானவை** | **591,676** | **91.53** | |
| **நிராகரிக்கப்பட்டவை** | **54,780** | **8.47** | |
| **அளிக்கப்பட்டவை** | **646,456** | **65.78** | |
| **பதிவு செய்யப்பட்டவை** | **982,721** | | |

## ஆனைக்கோட்டையில் நேற்று கோஷ்டி மோதல்; இருவர் காயம்

யாழ்ப்பாணம்,மே12

ஆனைக்கோட்டையில் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்ற கோஷ்டி மோதல் சம்பவத்தில் இரண்டுபேர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆனைக்கோட்டை, 3ஆம் கட்டையைச் சேர்ந்த சுதாகரன் (வயது 20) இளவாலை, திலக்கணையைச் சேர்ந்த ச.சுதர்சன் (வயது 23) ஆகிய இருவருமே காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவரை பொலீஸார் கைது செய்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது

(203-78)

## மரண அறிவித்தல்கள்

### நீக்கிலாப்பிள்ளை யோசவ் மரியநாயகம் (ஆண்டவர்)

**(மன்னார் புனித சவேரியார் ஆண்கள் மகாவித்தியாலயம், புனித கென்றியாரசர் கல்லூரி முன்னாள் ஆசிரியர், பண்டத்தரிப்பு M.P.C.S முன்னாள் நிர்வாக உறுப்பினர்)**



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நீக்கிலாப்பிள்ளை யோசவ் மரியநாயகம் நேற்று (11.05.2008) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மேரி யோசேப்பினின் அன்புக் கணவரும் , யோண்சன் விமல்ராஜின் (M.P. C.S) பாசமிகு தந்தையும் டொறினின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு நாளை (13.05.2008) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சில்லாலை கதிரை மாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கதிரைமாதா சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கீரியந்தோட்டம், சில்லாலை.* (74036)

தகவல்: **மனைவி, மகன், மருமகள்.**

### கந்தையா ஆறுமுகம்

வதிரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா ஆறுமுகம் நேற்று (11.05.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12.05.2008) திங்கட்கிழமை பி.ப. 2.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக்கொள்ளவும்.

*'உதயம்', நெல்லியடி வடக்கு, கரவெட்டி.*

தகவல்: **ஆ.உதயசீலன் (மகன் - யாழ்.போதனா வைத்தியசாலை**

### மோசஸ் இராயப்பு



**(ஓய்வுபெற்ற இ.போ.ச. ஊழியர்)**

சகாயபுரத்தைப் பிறப்பிடமாகவும் மாதகலை வசிப்பிடமாகவும் கொண்ட மோசஸ் இராயப்பு நேற்று (11.05.2008) ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மோசஸ் அந்தோணி தம்பதிகளின் மகனும், யோசைப்பு-மரியம்மா தம்பதியினரின் மருமகனும். யேசுமலரின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற அந்தோணிப்பிள்ளையின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற வின்சன் மற்றும் செல்வக்குமார், இராஜேஸ்வரி, பற்றிமாராணி, மேரி கிலிஸ்ரா ஆகியோரின் மைத்துனரும். மொனிஸ்ரெலா, ஜெயசீலன், ஜெயரட்ணம் கொலஸ்ரிக்கா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஸ்ரனிஸ்லஸ் ஜெகநாதன், கிச்சொக் கெனடி ஜெசிந்தாராணி, சுமதி ஆகியோரின் மாமனாரும் பிரியதர்சினி - சீலன், நிக்சன், டினோஜன், டிலக்ஷி, றொயின், றொசான், அனஸ்ரிக்கா லக்ஸ்மன் ஆகியோரின் பேரனுமாவார்.

அண்ணாரின் இறுதி நல்லடக்கம் இன்று (12.05.2008) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் திருப்பலி ஒப்புக்கொடுத்து பூதவுடல் மாதகல் சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அம்மாள் கோயிலடி, மாதகல்.*

தகவல்: குடும்பத்தினர்

### கந்தப்பு சபாரத்தினம்



*(முன்னாள் ஆசிரியர்)*

சுன்னாகம்மேற்கு, கொத்தியாலந்தையைச் சேர்ந்த கந்தப்பு சபாரத்தினம் (முன்னாள் ஆசிரியர்) நேற்று (11.05.2008) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி கண்மணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கந்தப்பு - மனோன்மணி அவர்களின் மகனும், காலஞ்சென்ற அரியமலர், மகேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், ஜெயராணி, இந்திராணி, சண்முகலிங்கம், காலஞ்சென்ற மகேஸ்வரன், ஜெகதீஸ்வரன்(பவுண்), வசந்தராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், நாராயணமூர்த்தி, அருளானந்தம், குலேந்திரன் (முகாமையாளர், கொமர்ஷல் வங்கி, சுன்னாகம்), சிலோசனா, குமுதாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.05.2008) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12மணியளவில் நடைபெற்று பூதவுடல் கொத்தியாவத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*கொத்தியாலம், சுன்னாகம் மேற்கு.*

தகவல்: **பிள்ளைகள்**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி எலிசபேத் நேசம்மா செல்லத்துரை



19, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளியை பிறப்பிடமாகவும், வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி எலிசபேத் நேசம்மா செல்லத்துரை (09.05.2008) வெள்ளிக் கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந் தார்.

அன்னார் காலஞ்சென்ற யேசுதாசன் செல்லத்துரையின் துணைவியும், காலஞ்சென்ற செல்லத்துரை தம்பதியின் சிரேஸ்ட புத்திரியும், பரம்சோதி, பத்மராணி, வேதநாயகி, சவுந்தரராஜன், சாந்தகுணதேவி, நரேந்திரநாதன் ஆகியோரின் அன்புத்தாயாரும் திருமதி சிவஞானம் பரம்சோதி, காலஞ்சென்ற பரமலிங்கம், மற்றும் ரட்ணராஜா, ரூபி, சந்திரகுமார் யசோ ஆகியோரின் மாமியும், சுரேக்கா, வாகீசன், ஜொய்சி, ராஜ்குமார், பரிமள காந்தி, காலஞ்சென்ற நிமல்ராஜ் மற்றும் றொசான், ரமணி, சபாநாதன், டிலான், மகிந்தன், தர்மபாலன், சஞ்சீவ், நூபன், றொகான், ரண்சித், றொனால்ட், றொசானா,ரேணுகா, சபினா, சாமுவேல், டானியல், நிரோசினி ஆகியோரது பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (12.05.2008) திங்கட்கிழமை பி.ப 3.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று சுண்டுக்குளி சென்.ஜோன்ஸ் கல்லறைத் தோட்டத்தில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*19 ,கொழும்புத்துறை வீதி சுண்டுக்குளி , யாழ்ப்பாணம்.* (73363)

தகவல்: **பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

### மாணிக்கம் செல்வரத்தினம்

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் செல்வரத்தினம் நேற்று (11.05.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சிவயோகத்தின் கணவர் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.04.2008) நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **மனைவி; மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## வவுனியா, மன்னார், யாழ்ப்பாணத்தில் கைத்தொலைபேசிகள் செயலிழப்பு

கொழும்பு, மே 12

வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங் களில் கைத்தொலை பேசிகள் மற்றும் சிடி.எம்.ஏ. என்ற கம்பியில்லாத் தொலைபேசிகள் போன்றன நேற்றுமுன்தினம் முதல் தற்காலிகமாக செயலிழந்திருக் கின்றன.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலையொட்டி மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்புச் செயற்பாடுகளின் ஓர் அங்கமாகவே இவை செயலிழக்கப்பட்டன என்றும், பின்னர் இவை வழமைக்குத் திரும்பும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (சி)

## பேராசிரியர் இராஜரத்தினத்தின் அஞ்சலி நிகழ்வு இன்று பல்கலையில்

யாழ்ப்பாணம்,மே12

பேராசிரியர் செல்வரத்தினம் இராஜரத்தினத்தின் (ரோனி) அஞ்சலி நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் யாழ்.பல்கலைக்கழக கைலா சபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

துணை வேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த அஞ்சலி நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

**விற்பனைக்கு**

Delica van (மிகவும் நல்ல நிலையில் உள்ளது), MD-90 மோட்டார் சைக்கிள், 5 CD Set (panasonic), vcp, மீன்தொட்டி, மின் தராசு, Gas Cooker, Cake Beeter, Battery Charger, 3HP Motor, Dish Antena Set, Air Comprser

தொடர்பு:-S.பிரேம், இல: 18, நக்கா றோட், யாழ்ப்பாணம்

Tel- 222 9201

**உடன் தேவை**

Cisco Router (805) தேவை.

தொடர்புகளுக்கு:- K.Kala

021 222 7855

THE ROYAL COLLEGE OF JAFFNA

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக் கப் பயில மற்றும் இலக்கணம் By நவிக்கினேஸ்வரன்

ஆச்சாரி, 426 (302), K.K.S வீதி, யாழ்ப் பாணம்.

பிள்ளை வீதி, சங்கானை.

"THE ROYAL IS THE BEST"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# கிழக்கில் ஜனநாயகப் படுகொலை

ஈழத் தமிழர் தாயகத்தின் தென்புறத்தில் - கிழக்கிலங்கையில் - 'வெற்றிகரமாக' ஒரு தேர்தலைத் தான் நடத்தி முடித்திருப்பதாகக் காட்டியிருக்கின்றது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசு.

தமிழர்களின் பாரம்பரிய பூமியான வடக்கு - கிழக்கில் அவர்களின் தாயக மண் மீதான பிறப்புரிமைக் கோரிக்கையைச் சிதைத்து அழிக்கும் எண்ணத்துடன், வடக்கையும், கிழக்கையும் நிர்வாக ரீதியாகத் துண்டித்துப் பிளக்கும் தனது கபடத் திட்டத்தில் வெற்றி கண்டு விட்டதாகக் கருதும் தென்னிலங்கை, அந்த வெற்றியை நிலைநிறுத்தும் கற்பனையோடு இப்போது ஒரு மோசடித் தேர்தலையும் அங்கு நடத்தி முடித்திருக்கின்றது.

தமிழர் தாயகத்தைப் பிளந்து - துண்டாடி - மாகாண நிர்வாகம் என்ற பெயரில் கிழக்கில் கொழும்பு அரசினால் உருவாக்கப்படும் இந்தப் பொம்மைக் கட்டமைப்புக்குப் பொறுப்பாளராக, அரசுத் தரப்பின் ஏவலாளராக, யார் நியமிக்கப்படப் போகின்றார்கள் என்பதில் தமிழர்களுக்கு அக்கறை இல்லை.

கிழக்கு மாகாண ஆட்சியும் சரி, வடக்கு மாகாண செயலணி நிர்வாகமும் சரி, தமது விடுதலையின் வேணவாவில் ஊறித் திளைத்திருக்கும் தமிழர்களைப் பொறுத்தவரை, 'இராவணன் ஆண்டாலென்ன, இராமன் ஆண்டாலென்ன, கூட வந்த குரங்கு ஆண்டாலென்ன?' - என்ற சிந்தனைப் போக்கில் அளவீடு செய்யப்படுபவைதான்.

என்றாலும், இந்தக் கிழக்குத் தேர்தலும் அதை மஹிந்த அரசு நடத்திய விதமும், அதையொட்டி ஜனநாயகத்தின் பெயரால் அரங்கேறிய அசிங்கங்களும் இலங்கை தொடர்பாக சர்வதேச சமூகம் சரியான ஒரு படத்தை வரைந்து கொள்ள உதவியிருக்கும் என்பது நிச்சயம்.

பிரகடனப்படுத்தப்பட்ட வாக்குப் பெறுபேறுகள் பற்றிய எண்ணிக்கை - அல்லது தேர்தல் முடிவு பற்றிய அறிவிப்பு - ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசுக்குத் தனியாக தலைப்பாகை - கிரீடம் - சூட்டுவதாக அமையலாம்.

ஆனால் அந்தத் தலைப்பாகையில் - கிரீடத்தில் - ஊழல், மோசடி, ஆள் மாறாட்டம், குளறுபடி, வன்முறை, அச்சறுத்தல், கள்ளவாக்கு என்று வரிசை வரிசையாக நெய்யப்பட்டிருக்கும் ஜரிகைகள் அப்பட்டமாக வெளியில் தோற்றுகின்றன. அரசுத் தரப்பின் அயோக்கியத்தனத்தை அம்பலப்படுத்தி, ஆவணப்படுத்தி, அரங்கேற்றுவதிலும், பறைசாற்றுவதிலும் இந்தத் தேர்தல் ஒரு சாதனை படைத்திருக்கின்றது என்றால் அது மிகையாகாது.

இந்தக் கண்கட்டு வித்தைத் தேர்தல் நாடகத்தின் முடிவின்படி, பிள்ளையான் அணி என்ற ஆயுதக் குழுவைக் கைகோர்த்து, அரவணைத்து போட்டியிட்ட ஆளும் தரப்புக்கு இரண்டு போனஸ் ஆசனங்களுடன் சேர்ந்து கிழக்கு மாகாணசபையில் இருபது இடங்கள். ஐக்கிய தேசியக் கட்சி - ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூட்டுக்குப் பதினைந்து இடங்கள். திருகோணமலை மாவட்டத்தில் ஜே.வி.பிக்கு ஓரிடமும், மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்புக்கு ஓரிடமும் கிடைத்திருக்கின்றன.

இலங்கைத் தேர்தல் வரலாற்றில் மிகப் பெரிய மோசடி வாக்களிப்பு என இதனை வர்ணித்துள்ள இலங்கையின் பிரதான எதிர்க்கட்சிகள் எல்லாம், இதனைப் பெரும் ஜனநாயகப் படுகொலைச் செயற்பாடு என்றும் விமர்சித்துள்ளன.

ஆயுதக் குழு ஒன்றை அரவணைத்து, அதனுடன் அரசே கூட்டுச் சேர்ந்து, அராஜகங்களையும், சட்ட அத்துமீறல்களையும் கட்டவிழ்த்துவிட்டு, உச்ச மோசடியோடு இந்த ஜனநாயகப் படுகொலையைப் புரிந்திருக்கின்றது என்று எதிர்க்கட்சிகள் அனைத்தும் கூட்டுச் சேர்ந்து குரல் எழுப்பியிருக்கின்றன.

ஆயுதக் குழுக்களை இலங்கை அரசு தனது துணைப்படையாக வைத்துக்கொண்டு, 'புலிகளை ஒழிக்கும் செயற்பாடு' என்ற பெயரில் புரிந்துவரும் கொடூரங்களும், அரச பயங்கரவாதமும் இப்போது வெளிப்படையானவை. அவற்றைக் கண்டு உலகமே அதிர்ந்து போய் நிற்கின்றது.

அதே அரச பயங்கரவாதம் இப்போது கிழக்கு மாகாணத் தேர்தலிலும் அரசின் 'ஜனநாயக வெற்றிக்கான' தேர்தல் நடவடிக்கைகளிலும் மிகத் தாராளமாகக் கட்டவிழ்ந்திருக்கின்றது.

பெரிய எடுப்பில் ஆள் மாறாட்டங்களும், கள்ள வாக்குத் திணித்தலும், அச்சுறுத்தி வாக்காளர்களை வாக்களிக்க விடாமல் தடுத்தலும், வாக்குகளை அள்ளிக் கொட்டலும் வரையறை தாண்டி மிக மோசமாக இடம்பெற்றிருக்கின்றன என்பதை நேற்று முன்தினம் வாக்களிப்பு முடிவதற்கு முன்னரே பிரதான எதிர்க்கட்சிகளான ஐ.தே.கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜே.வி.பி. போன்றவை வெளிப்படுத்தி விட்டன.

'பயங்கரவாதத்துக்கு எதிரான போர்' என்ற பொய்த் தந்திரோபாய சுலோகத்தைப் பயன்படுத்திக் கொண்டு, சர்வதேச சமூகத்தின் காதில் பூச்சுற்றியபடி தமிழர்களைக் கொன்றொழிக்கும் அரச பயங்கரவாதத்தை வெற்றிகரமாகத் தொடரும் கொழும்பு அரசு, அதேபோல, இப்போது இந்த ஜனநாயக மோசடித் தேர்தலையும் ஜனநாயகத்துக்குக் கிடைத்த பெரு வெற்றியாகப் பிரசாரப்படுத்தி, முன்நிறுத்த முயலும் என்பது திண்ணம்.

ஈழத் தமிழர்களை அழித்தொழிக்கும் கொழும்பின் அரச பயங்கரவாதத்தைக் கண்டும், காணாமலும் இருந்து, மௌனம் சாதித்து, அத்தவறுக்கு இடமளித்து, பெரும் குற்றமிழைக்கும் சர்வதேச சமூகம், இலங்கை அரசின் இந்த ஜனநாயகப் படுகொலையின் பிறப்பாக்கமாக உயிர்ப்பித்த இத் தேர்தல் முடிவு தொடர்பான அரசின் வெற்றிப் பிரகடனத்தையும் மௌனத்தோடு ஏற்று அங்கீகரிக்கும் என்பது உறுதி.

# புலிகளின் 'சமாதானம்' எறிகணைகளால் இராணுவம் மணிக்கு 30 - 40 ஆள்களை இழக்க நேர்ந்தது

## 'சண்டே லீடர்' வெளியிட்டுள்ள தகவல்

கொழும்பு,மே12

அண்மையில் நடைபெற்ற முகமாலைச் சமரில் தமிழீழ விடுதலைப் புலிகள் ''சமாதானம்'' எனப்படும் தமது தயாரிப்பு எறிகணைகளை ஏவியிருந்தனர். இதனால் மணிக்கு 30 - 40 பேரை சிறிலங்கா இராணுவம் இழந்திருந்தது என்று கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில வார ஏடான ''சண்டே லீடர்'' தெரிவித்துள்ளது.

''சமாதானம்'' என்னும் சொல்லை மிக வும் நகைச்சுவையாகக் களத்தில் வீழ்ந்து வெடிக்கும் எறிகணைகளுக்கு விடுதலைப் புலிகள் சூட்டியுள்ளனர் என்று எழுதியுள்ள அப்பத்திரிகை மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:

இந்த எறிகணைகள் கடந்த மார்ச் மாதம் 23 ஆம் நாள் நடைபெற்ற முகமாலைச் சமரிலும் அரசிற்குக் கடுமையான சேதத்தை ஏற்படுத்தியிருந்தன. 53 மற்றும் 55 ஆவது படையணிகள் விடுதலைப் புலிகளின் முன்னணி அரணை அடைந்த போது விடுதலைப் புலிகள் தாக்குதலை ஆரம்பித்ததுடன் 82 மி.மீ, 152 மி.மீ, 130 மி.மீ எறிகணைகளும் சரமாரியாக ஏவப்பட்டன. இந்தச் சமரில் விடுதலைப் புலிகள் 1,000க்கும் அதிகமான எறிகணைகளை ஏவியிருந்தனர். இதனால் மணிக்கு 30-40 பேரை இராணுவம் இழந்திருந்தது. 53 ஆவது படையணியே 80 வீதமான இழப்பைச் சந்தித்திருந்தது. விடுதலைப் புலிகள் தமது பீரங்கிகளில் சிலவற்றை சோரன்பற்றுப் பகுதியில் வைத்து இயக்கியிருந்தனர்.

### அருகிலிருந்தே தாக்கியுள்ளனர்

இந்தச் சமரில் பயன்படுத்திய தமது சொந்தத் தயாரிப்பு மோட்டார் எறிகணை களை விடுதலைப் புலிகள் படையின ருக்கு அருகில் வைத்தே பயன்படுத்தியிருந்தனர். ''சமாதானம்'' எறிகணைகள் 2 கி.மீ. தூரவீச்சுக் கொண்டவை. சிலர் அதன் தூரம் மிகவும் அதிகம் எனத் தெரிவித்துள்ளனர். எனினும் விடுதலைப் புலிகள் மிக அதிகளவில் எறிகணைகளைப் பயன்படுத்தியது அவர்கள் புதிதாக எறிகணைகளைத் தருவித்துள்ளதான சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. ''சமாதானம்'' எறிகணைகள் விடுதலைப் புலிகளின் மூன்றாம் தலைமுறை எறிகணைகளாகும். விடுதலைப் புலிகள் எறிகணைகளை உருவாக்கும் தமது முயற்சியை 1980களில் ஆரம்பித்திருந்ததாக றொகான் குணரட்ண தெரிவித்துள்ளார் இந்த எறிகணைகளின் பெயர் ''பாபா''. 1990 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ''பசீலன்-2000'' எறிகணைகளை விடுதலைப்புலிகள் பயன்படுத்தியிருந்தனர். விடுதலைப் புலிகளின் ஆயுத ஆய்வு மையத்தினால் வடிவமைக்கப்பட்ட ''பசீலன்-2000'' மோட்டார் 25 கி.கி. நிறையுடைய எறிகணையை 1 கி.மீ. தூரத்திற்கு வீசத்தக்கது. விடுதலைப் புலிகளின் இந்த தொழில்நுட்பப் பிரிவை குட்டிசிறி, மணி, ஒலிவர் ஆகியோர் நடத்தி வந்தனர். இவைகளை ராஜூ வழிநடத்தி வந்தார். வடமராட்சி பகுதியில் உள்ள வல்லிபுரம் பகுதியிலேயே இந்த எறிகணைகள் முதலில் பரீட்சித்துப் பார்க்கப்பட்டன.

இரண்டாவது சோதனை வட்டுக் கோட்டை வயல் வெளியில் நடத்தப் பட்டது. எனினும் அது வெற்றிபெற வில்லை. மூன்றாவது சோதனை கீரிமலைப் பகுதியில் நடத்தப்பட்டது. அது வெற்றி பெற்றிருந்தது.

இந்த சோதனைகளை விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் வீடியோவில் பார்வையிட்டிருந்தார். அதற்கு லெப். கேணல் குட்டிச்சிறி பொறுப்பு வகித்திருந்தார். 1990 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் யாழ். கோட்டை முற்றுகையில் விடுதலைப்புலிகள் அதனைப் பயன்படுத்தியிருந்தனர். பின்னர் பலாலி தளம் மீதும் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

''பசீலன்-2000'' எறிகணைச் செலுத்திகளை விடுதலைப் புலிகள் உழவு இயந்திரத்தில் பொருத்திப் பயன்படுத்தியிருந்தனர். படையினர் தமது எறிகணைச் செலுத்திகளைக் கண்டறிவதைத் தவிர்க்கும் முகமாக விடுதலைப் புலிகள் ஆட்டிலெறிப் பீரங்கிகளைக் கூட வாகனங்களில் பொருத்தியே பயன்படுத்தியிருந்தனர் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ். மாவட்டத்தில் இதுவரை எட்டு 'கோப் சிற்றி'கள்

யாழ். மாவட்டத்தில் இதுவரை எட்டு 'கோப் சிற்றி' விற்பனை நிலையங்கள் மக்கள் பாவனைக்கு திறந்து வைக்கப்பட்டிருப்பதாக மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ. சிவலிங்கம் தெரிவித்தார்.

அத்துடன் மேலும் 15 'கோப் சிற்றி' விற்பனை நிலையங்கள் திறக்க வேண்டியுள்ளது. அதற்கான ஏற்பாடுகளை சம்பந்தப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மேற்கொண்டு வருகின்றன என்றும் அவர் கூறினார்.

'கோப் சிற்றி' விற்பனை நிலையங்களை இதுவரை திறக்காத பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் விரைவாகத் திறந்து மக்கள் பாவனைக்கு விட துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று உதவி ஆணையாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மாவட்டத்தின் 23 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் அச்சுவேலி, கொடிகாமம், புலோலி, அளவெட்டி - மல்லாகம், உடுப்பிட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி, புங்குடுதீவு-நயினாதீவு போன்ற எட்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுமே 'கோப் சிற்றி' விற்பனை நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டுள் ளன. (203-224)

# சிறுவர் இல்லங்களில் பிள்ளைகளைச் சேர்ப்பதாயின் நீதிமன்றங்களின் அனுமதி பெறப்பட வேண்டும்

வலி.வடக்கு,மே12

யாழ். மாவட்டத்தில் சிறுவர் இல்லங்களில் பிள்ளைகளைச் சேர்ப்பதற்கு நீதிமன்றங்களின் அனுமதி பெற்றபின்னரே சேர்க்க முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிள்ளைகள் பெற்றோர்களுடனேயே வளர வேண்டுமென்ற சிறுவர் அமைப்புக்களின் செயற்பாடுகள், கட்டளைகளைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை நீதிமன்ற அனுமதியுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இது சம்பந்தமான அறிவுறுத்தல்கள் பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் இங்கு கடமையாற்றும் சிறுவர்களுடன் தொடர்புடைய சிறுவர் நன்னடத்தை அலுவலர், சிறுவர் மேம்பாட்டு அலுவலர் போன்றோருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகள் காரணமாக சிறுவர் இல்லங்களில் பிள்ளைகளைச் சேர்ப்பதற்கு கஷ்டப்பட்ட பெற்றோர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருவதாகவும் சுட்டிக்காட் டப்பட்டுள்ளது.

இதேவேளை வறுமைக் கோட்டின் கீழ் உள்ள சிறுவர் இல்லங்களில் சேர்க்காது பெற்றோர்களுடன் வைத்து வளர்ப்பதற்கு வசதியாக இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிதியம் போன்ற அமைப்புகள் குடும்பங்களை இனம் கண்டு குறிப்பிட்ட காலத்திற்கான உதவிகளை புரிகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். (203-86)

## நாளை

| | |
|---|---|
| சித்திரை 31 | 13.05.2008 செவ்வாய்க்கிழமை |
| திதி:நவமி | பி.இ.1.50வரை |
| நட்சத்திரம் : | மகம் மு.இ. 06.26வரை |
| சுபநேரம் : | 10.23 - 11.53 |
| ராகுகாலம் : | 02.53 - 04.23 |

## சமய சந்நிதிகளில்

வடமராட்சி,மே12

அம்பன் முருகன் கோயிலில் கும்பாபிஷேக தினமான கடந்த சனிக்கிழமை தொடக்கம் கந்த புராண படிப்பு ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் ஆனி உத்தர தினத்தன்று கந்தபுராணப் படிப்பு நிறைவடைவதுடன், அன்னதானமும் இடம் பெறும். (203-236)

* * *

வடமராட்சி,மே12

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய பெருந்திருவிழா கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 18 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203)

* * *

யாழ்ப்பாணம்,மே12

காரைநகர் களபூமி பாலாவோடை குறிஞ்சாக்குளி முத்துமாரி அம்மன் ஆலயப் பெருந்திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 19 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் 20 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203)

# துப்புதலுக் கெதிரான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் நல்லூர் பிரதேச சபையால் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம்,மே12

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபை 'பொது இடங்களில் துப்புவதைத் தவிர்ப்போம்!' என்னும் பிரகடனத்தை வெளியிட்டுள்ளது. அதற்கமைய விழிப்புணர்வுச் செயற்பாடுகளையும் முன்னெடுக்கவுள்ளது.

பொது இடங்களில் துப்புவது அடுத்த மனிதனுக்கு அருவருப்பையும் அசௌகரியத்தையும் ஏற்படுத்துகின்றது. அத்துடன் சூழலின் அழகைக் கெடுத்து நோய் பரவுவதற்கும் வழி கோலுகின்றது.

எனவே இந்த ஆண்டுக்கான சுற்றாடல் தினச் செயற்பாடாக துப்புதலுக் கெதிரான விழிப்புணர்வு நிகழ்வுகளை முன்னெடுக்க நல்லூர் பிரதேச சபை திட்டமிட்டுள்ளது. (202)

# வேலணைப் பிரதேச சபையின் உப அலுவலகத்தை புனரமைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,மே12

அல்லைப்பிட்டியில் மீள்குடியேற்றம் இடம் பெற்றுவருவதை அடுத்து வேலணைப் பிரதேச சபை உப அலுவலகம் மீள் புனரமைப்பு செய்யப் படவுள்ளது. வேலணைப் பிரதேச சபைச் செயலாளர் கை. மகேந்திரலிங்கம் தலைமையிலான குழு அண்மையில் சேதமடைந்த உபஅலுவலகக் கட்டடத்தைப் பார்வையிட்டு மதிப்பீடு செய்துள்ளது.

விரைவில் அல்லைப்பிட்டி உப அலுவலகம் நவீன வடிவில் மீள் புனரமைப்பு செய்யப்படவுள்ளது. இதற்கான எண்ணக்கரு படிவம் தயாரிக்கப்பட்டு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்று கூறப்பட்டுள்ளது. (203-95)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிப்பாய் மேற்கில் கட்டுடைப் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு; மக்கள் விசனம்

யாழ்பாணம்,மே12

மானிப்பாய் மேற்கு கட்டுடைப் பிர தேசத்தில் சட்ட விரோதமாக மணல் அகழ்வு இடம்பெற்று வருவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

புலம் பெயர்ந்தவர்களின் காணிகளில் இருந்து டிராக்டர்கள் மூலம் மணல் அகழப் பட்டு வருகின்றது எனவும் மணல் அகழ வருவோர் குறித்த காணிகளைத் தமது காணிகள் என் கூறுவதாகவும் விசனம் கூறப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பாக வலி.தென் மேற்குப் பிரதேச செயலர் திருமதி ரூபிணி வரதலிங்கத்திற்கு மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத் தலைவர் கடிதம் மூலம் அறிவித்துள்ளார். அந்தக் கடிதத் தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கட்டுடை - மானிப்பாய் பிரேதசத்தில் நீண்ட காலமாகச் சட்டவிரோதமாக மணல் ஏற்றுதல் நடைபெற்று வருகிறது. இவ் வாறு ஏற்றப்படும் ஒரு உழவு இயந்திரப் பெட்டி மணல் 6 ஆயிரம் ரூபாவுக்கு விற் பனை செய்யப்படுகிறது.

ஒரு சில டிராக்டர் உரிமையாளர் புலம் பெயர்ந்தவர்களின் காணிகளைத் தங்கள் காணி என்று கூறி மணல் விற்பனை செய் கின்றார்கள்.

இதனைவிட வயல் வெளிகளிலும் வழுக்கையாற்று படுகை வரம்புகளிலும், சட்ட விரோதமாக மணல் ஏற்றப்படுகிறது இதனால் வயல் நிலங்கள் பெரிதும் பாதிப் படைந்து வருகின்றன.

கட்டுடை குடியிருப்புகளைச் சுற்றியுள்ள பனங்காணிகளில் மணல் அகழ்வதனால் பனைமரங்கள் சரிந்து விழுந்துள்ளன. இதனால் குடியிருப்பாளர்மிகவும் பாதிக்கப் பட்டுள்ளனர். எனவே இதற்கான உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என் றுள்ளது. (203-95)

## கால்நடை வளர்ப்போரை பதிவு செய்யக் கோரிக்கை

வடமராட்சி,மே12

வடமராட்சிப் பிரதேசத்தின் கால்நடை வளர்ப்போரைப் பதிவு செய்து கொள்ளு மாறு பருத்தித்துறை, கரவெட்டி அரசினர் கால் நடை வைத்திய நிலையங்கள் கேட் டுள்ளன.

தற்போது தொண்டைமானாறு, கெருடா வில் ஆகிய பகுதிகளில் கால் நடை வளர்ப் போரின் விவரங்களைப் பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய நிலையம் திரட்டி வருகின்றது.

ஏனைய பகுதிகளைச் சேர்ந்த கால் நடை வளர்ப்போர் தத்தம் பகுதி கால்நடை வைத் திய நிலையங்களில் விவரங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளனர். (203-236)




## தற்காலிக உப தபாலதிபர்களுக்கு நிரந்தர நியமனம் கிடைத்தது

பருத்தித்துறை அஞ்சல் அலுவலகப் பிரிவிலுள்ள எட்டு உபதபால் நிலையங் களில் தற்காலிக உபதபாலதிபர்களாகக் கடமையாற்றிய எட்டுப் பேருக்கும் தபால் திணைக்கணளத்தினால் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

நியமனம் பெற்ற உப தபாலதிபர்களும், அவர்கள் பணிபுரியும் உப தபால் நிலை யங்களும் வருமாறு:-

திருமதி கௌரிமலர் சாந்தலிங்கம் - புலோலி, திருமதி கோசலா கருணாநிதி - அல்வாய், திருமதி சிவனேஸ்வரி திருக்கு மார் - திக்கம், செல்வி மாலதி செல்வராஜா - சாளாம்பை, செல்வி சுபாஜினி திருநாவுக் கரசு - மருதடி, செல்வி பிரியகௌரி தவ ராசா - நெல்லண்டை, செல்வி சுலோசனா சிவஞானசுந்தரம் - நாகர் கோயில், திருமதி சங்கீதா சுரேஷ் - குடத்தனை. (203-236)

## இயந்திரம் கிடைத்ததும் மீன்தூள் தொழிற்சாலை இயங்கும்

வடமராட்சி,மே12

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனத் தின் (யு.என்.டி.பி) நிதி உதவியுடன் கற் கோவளத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள மீன் தூள் தொழிற்சாலைக்கான இயந்திரம் கிடைத்ததும், அது இயங்கத் தொடங்கும் என வடமராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் தெரிவித்துள்ளது.

இதற்கான மீன் தூள் அரைக்கும் இயந் திரம் மற்றும் தேவைகளுக்கென ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனம் ஒரு மில் லியன் ரூபாவை இச் சங்கத்திற்கு வழங்கி யுள்ளது.

இத் தொழிற்சாலைக்கெனத் தனியார் ஒருவரின் வீடு பெறப்பட்டுள்ளது. இங்கு பணியாற்றவென வறுமைக்கோட்டின் கீழ் வாழும் சுமார் 10 பெண்கள் தெரிவு ெய்யப் பட்டுள்ளனர். உற்பத்தி செய்யப்படும் மீன் தூள் வட மராட்சிப் பிரதேசத்தில் உள்ள கோழி வளர்ப்பாளர்களுக்குத் கோழித்தீனுக்கு விற்பனை செய்யப்படும் என்று தெரிவிக் கப்பட்டது. (203-236)

## ஒலி பெருக்கி சாதனம் ஆலயத்திற்கு வழங்கப்பட்டது

பருத்தித்துறை தொப்பணாவத்தை ஞான வைரவர் ஆலயத்திற்கு புலம் பெயர்ந்து வாழ் பவர்கள் 80 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒலி பெருக்கிச் சாதனங்களை அன்பளிப் புச் செய்துள்ளனர். பளையிலிருந்து இடம் பெயர்ந்து பருத்தித்துறையில் தஞ்சமடைந் திருந்த குறிப்பிட்ட குடும்பத்தினர் தற்போது புலம்பெயர்ந்து வசித்து வருகின்றனர்.(203-218)

# சத்தியசாயி நிறுவன வடபிராந்திய சபை இளைஞருக்கென நடத்தும் ஆக்கப் போட்டிகள்

யாழ்ப்பாணம். மே 12

சத்தியசாயி நிறுவனத்தின் வடபிராந் திய சபை இந்த வருடத்திற்கான இளைஞர் நிகழ்வுகளையும், போட்டிகளையும் அடுத்த மாதம் நடத்த உள்ளது. இதற்கென ஆக் கங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான ஏற்பாடுகள் இளைஞர் சபை யின் இணைப்புக் குழுவினரால் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட் டுள்ளது.

ஆக்கங்கள் இளைஞர் நிலையங்களின் தலைவரூடாக எதிர்வரும் 31 ஆம் திக திக்கு முன்னதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

கட்டுரை, பாடல் இயற்றுதல் தவிர்ந்த ஏனைய நிகழ்வுகள் அடுத்த மாதம் 14, 15, ஆம் திகதிகளில் இராமநாதன் வீதியில் உள்ள தலைமையகத்தில் நடைபெறும் என்று கூறப்பட்டுள்ளது.

பேச்சு, கொடுக்கப்பட்ட 12 தலைப் புகளில் இடம்பெறும். குலுக்கல் முறை மூலம் தலைப்புத் தெரிவு செய்யப்படும்.

பேச்சு நிகழ்வில் குறிக்கப்பட்ட தலைப் புகளில் கருத்துரை வழங்க அனுமதிக் கப்படும். 30 நிமிட நேரம் தெரிவு செய் யப்படும் தலைப்புகளில் கருத்துரை வழங் கத் தயார் நிலையில் இருக்க வேண்டும். அத்துடன் கற்பித்தல் சாதனங்கள் பயன் படுத்தப்படல் வேண்டும்.

கொடுக்கப்பட்ட தலைப்புகளில் மூன் றை தெரிவுசெய்து ஒவ்வொரு தலைப் பிலும் 300 தொடக்கம் 350 சொற்களுக் குள் கட்டுரை எழுதி நிலையத் தலை வரூடாக 31 ஆம் திகதிக்கு முன் அனுப் புதல் வேண்டும்.

'மனித மேம்பாட்டுக் குணங்கள்,' 'மத ஒருமைப்பாடு' ஆகிய இரு தலைப்புக ளிலும் 8 வரிகள் கொண்டதாகப் பாடல் எழுதி அனுப்புதல் அவசியம்.

அத்துடன் விநாடி வினா ஒன்றினை நிலைய மட்டத்தில் நடத்தி ஆண் ஒருவர் பெண் ஒருவர் என்ற வகையில் இருவர் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

கருத்துச் சித்திரம் வரைதலில் பென் சிலை மட்டும் பாவிக்க வேண்டும். கருப்பொருள் ஆன்மீக சிந்தனை தழுவி யதாக இருத்தல் அவசியம். இசைக் கரு விகள் வாசித்தல், தனி நடிப்பு நிகழ்வு களும் இடம்பெறவுள்ளன.

(203-302)

# வறுமை காரணமாக மாணவர்களின் கல்வி எந்த வகையிலும் பாதிக்கப்படக் கூடாது

## கோப்பாய் பிரதேச செயலர் மோகன்றாஸ்

நல்லூர் மே.12

வறுமை காரணமாக எந்தவொரு மாண வரதும் கல்வி பாதிக் கப்படக்கூடாது. முடிந்தவரையில் கற்கவேண்டும். கோப் பாய் பிரதேச செய லர் சீ.ஏ. மோகன் றாஸ் இவ்வாறு குறிப் பிட்டுள்ளார்.



கோப்பாய் சமுர்த்தி மகா சங்கத்தின் சமூக அபிவிருத்தி மன்றம் சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு கொடிதின நிகழ்வு நிதி பயன்பாடு 2008 நிகழ்வைத் தொடக்கி வைத்து உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகை யில்:-

வசதியின்மையால் தமது கல்வியைத் தொடர முடியாத நிலையில் உள்ள மாண வர்களுக்கு முடிந்தவரை உதவி வழங்கி எதிர்காலத்தில் அவர்கள் கல்வியில் மேம் பாடு காணக்கூடியதான செயற்பாடுகள் தேவை.

கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள மிகவும் கஷ்ரமான மாணவர்களை இனங்கண்டு அவர்களுக்கு முடிந்த உதவி கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதற்கென அனைத்து உத்தியோகத்தர் களுடனும், மதகுருமார் போன்ற முக் கியஸ்தர்களுடனும் செய்து கொண்ட ஆலோ சனையின் பேரில் சமூக அபிவிருத்தி மன் றம் வறுமையான குடும்பங்களில் இருந்து தெரிவு செய்த மாணவர்களுக்கு உதவி களை வழங்குகிறது.

மாணவர்களோ, அவர்களின் பெற் றோர்களோ வழங்கப்படும் உதவிகளை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தாது கல்விக்காகவே செலவிட வேண்டும்.

இவை உங்கள் கல்வி நடவடிக்கைக் காக உதவும் பொருட்டு சேகரிக்கப்பட் டவை. உயர் கல்வியைத் தொடர முடியாத நிலையில் பல மாணவர்கள் தமது கல் வியை இடைநிறுத்தி விடுகிறார்கள்.

எதிர்காலத்தில் எமது பிரதேச மாணவர் களுக்கு மேலும் பல உதவிகளைச் செய்ய வுள்ளோம்.

ஜி.சீ.ஈ சாதாரண பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களை யும் கௌரவிக்க வேண்டும் என்பது எமது எண்ணம்.

கிடைக்கும் வழங்களைப் பயன்படுத்தி கல்வியில் மேம்பாடு கொண்டவர்களாக நீங்கள் வாழ வேண்டும்.

வறுமையான நிலையிலும் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் கொண்ட மாண வர்களின் கனவுகள் நனவாக வேண்டும்

அதற்கான உதவிகளையும் நாங்கள் வழங்க வேண்டும்.

இந்தப் பிரதேசத்தின் கல்விக்காக எல் லோருமே கவனம் செலுத்த வேண்டும் - என்றார். (203-111)

## கூட்டங்கள்

யாழ்ப்பாணம்,மே12

குழுச் சாரணத் தலைவர், குருளைச் சாரணத் தலைவர்கள் ஆகியோருக்கான கூட்டம் இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

சாரணத் தலைவர்களை கலந்து கொள் ளுமாறு மாவட்டசாரண ஆணையாளர் ஜி.செபஸ்தியாம்பிள்ளை கேட்டுள்ளார். (203)

* * *

வடமராட்சி,மே12

கெருடாவில் வடக்குக் கிராம அபி விருத்திச் சங்கதின் கூட்டம் நாளை செவ் வாய்க்கிழமை கெருடாவில் முன்பள்ளி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர். வர தீஸ்வரன் கலந்து கொள்வார். (203-236)

# சிறாரின் போஷாக்கை அதிகரிக்கச் செய்வது குறித்து சில்லாலைக் கருத்தரங்கில் ஆராய்வு

வலி தென்மேற்கு -மே.12

சில்லாலை, சாந்தை கிராமத்தில் போஷாக்குக் குறைந்த பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. போஷாக்கு குறைவான பிள்ளைகளின் போஷாக்கு நிலையை அதிகரிப்புச் செய்யும் முகமாக அண்மையில் கருத்தரங்கு ஒன்று நடத் தப்பட்டது.

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர். டினேஸ் ஜெயக்குமாரன் தலைமை யில் நடைபெற்ற இக் கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளைப் பண்டத்தரிப்பு பொது சுகாதாரப் பரிசோதகர் என். நிர்மலானந்தன் மேற்கொண்டிருந்தார்.

இளவாலை பொது சுகாதாரப் பரிசோதகர் ஜெ. உமாசுதன் உட்பட மற்றும் பலர் இதில் உரையாற்றினார்கள்.

இளவயதில் மேற்கொள்ளப்படும் திரு மணங்களால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் டினேஸ் ஜெயக்குமாரன் விவரமாக இக் கருத்த ரங்கில் எடுத்துக் கூறினார்.

போஷாக்குக் குறைந்த பிள்ளைகள் பிறப்பதற்கு இள வயதுத் திருமணமும் ஒரு காரணமாக இருப்பதால் அதனைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இப் பகுதியிலுள்ள கர்ப்பிணித் தாய்மார் கள் மற்றும் பலர் இக் கருத்தரங்கில் பங்கு பற்றினர். (203-135)






மருதனார்மடத்தில் அமைந்துள்ள வாழ்வகத்தில் கணனி ஆய்வு கூடத் திறப்பு விழா வாழ்வகத் தலைவர் ரவீந்திரன் தலைமை யில் அண்மையில் இடம்பெற்றது.

கணனி அறையை நிர்மாணித்துக் கொடுத்த 'ஈ.யூ.ரி' நிறுவன உரிமையாளர் சிறிஸ் கந்தராசா கணனி அறையை நாடா வெட் டித் திறந்து வைப்பதை முதலாவது படத்திலும் கணனி அறையில் இல்ல மாணவர்களுடன் வாழ்வகத் தலைவர் நிற்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

(படங்கள்:நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்ப்பாணம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற தடகள விளையாட்டுப் போட்டிகளின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் வீரர்களின் ஓட்டப் போட்டியை முதலாவது படத்திலும் கோலூன்றிப் பாய்தல் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற சென்.ஜோன்ஸ் கல்லூரி மாணவன் கா.அரசிளங்குமரன் கோலூன்றிப் பாயும் காட்சியை இரண்டாவது படத்திலும் காணலாம். போட்டிகளில் சம்பியன் வென்ற வீர வீராங்கனைகளை அடுத்த இரண்டு படங்களிலும் காணலாம். (படங்கள்: நேசன்)

# மாவட்ட 19 வயதுப் பிரிவு வலைப்பந்தாட்டம் யூனியன் கல்லூரி வென்று மாவட்டச் சம்பியனானது

வலி.வடக்கு,மே12

யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற 19 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வெற்றிபெற்று மாவட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் ஏற்கனவே வலிகாமம் கல்வி வலயபப் போட்டிகளில் மோதிக் கொண்ட அணிகள் என்பதுடன் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி முதலாம் இடத்தையும் யூனியன் கல்லூரி இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்ட அணிகளும் ஆகும்.

இந்தப் போட்டியென்பது, இரு அணிகளுக்கும் தன்மானப் போட்டியாகவும் அமைந்திருந்தது. விட்டதை மீளப்பெற வேண்டும் என்ற துடிப்புடன் யூனியன் கல்லூரியும், பெற்றதைப் பறிகொடுத்து விடக்கூடாது என்ற நம்பிக்கையுடனும் இந்துக் கல்லூரியும் ஆரம்பம் முதல் சிறப்பாக ஆடின.

போட்டியென்றால் போட்டியாகவே இரு அணிகளும் விளையாட அணிகளின் ஆசிரியர்கள் மற்றும் ஆதரவாளர்களும் மைதானத்திற்கு வெளியால் மிகவும் பதற்றமாகக் காணப்பட்டார்கள்.

முதல்பாதி ஆட்டம் யூனியன் கல்லூரி 15 புள்ளிகளையும், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி 10 புள்ளிகளையும் பெற்ற நிலையில் ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டம் மீண்டும் பலத்த போட்டியாகவே ஆரம்பமாகியது. இரு அணிகளுமே புள்ளிகளைப் பெறும் முயற் சியில் கவனம் செலுத்திய வேகத்தில் எதி ரணி புள்ளிகள் பெறுவதினை தடுப்பதிலும் கவனம் செலுத்தி விளையாடினார்கள்.

இதன் காரணமாக எந்த அணி எந்த அணியை இரண்டாம் பாதி ஆட்டத்தில் மேல திக புள்ளிகளைப் பெறும் என்று கூற முடி யாத அளவுக்கு இரு அணிகளும் மிகவும் துடிப்புடன் மாறி மாறி புள்ளிகளைப் பெற் றுக் கொண்டன. இரண்டாம் பாதி ஆட் டத் தின் முடிவில் இரு அணிகளும் தலா 12 புள்ளி களை மட்டும்மே பெற்றுக் கொண்டன.

ஆட்டம் நிறைவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி 27:22 புள்ளிகள் என்ற அடிப்படையில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியை வெற்றி கொண்டு யாழ். மாவட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டதுடன், மாகாண மட்டப் போட்டியில் விளையாடவும் தகுதி பெற்றுள்ளது.

மூன்றாம் இடத்திற்கான ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியும், வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியும் மோதிக் கொண்டன. ஆட்ட நிறைவில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி 23:16 புள்ளிகள் என்ற அடிப்படையில் கொக்குவில் இந்துக் கல்லூரியை வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. (86)

# யாழ். லீக்கின் உதைபந்தாட்டம் பாஷையூர் சென். அன்ரனீஸ் வெற்றி

குருநகர்,மே12

யாழ். உதைபந்தாட்ட லீக் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடத்திய நொக்கவுட் முறையில் அமைந்த உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டியில் குருநகர் பாடுமீன் 'ஏ' விளையாட்டுக் கழகம் பாஷையூர் சென். அன்ர னீஸ் 'ஏ' விளையாட்டுக் கழகத்தை 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

இந்த இறுதிப் போட்டி குருநகர் விளையாட்டு மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

இப் போட்டிக்கு பிரதம மத்தியஸ்தராக சுரேந்திரனும் அஜித், நித்திலநாயகம் ஆகியயோர் துணை மத்தியஸ்தர்களாகவும் கலந்து கொண்டார்கள்.

இந்த இறுதிப் போட்டியின் சிறந்த வீரர்களாக குருநகர் பாடுமீன் 'ஏ' விளையாட்டுக்கழக வீரர் நிஹால் எடிசனும், பாஷையூர் சென்.அன்ரனீஸ்'ஏ' விளையாட்டுக் கழக வீரர் உதயதாஸும் தெரிவு செய்யப்பட்டனர். (51)

# தென்மராட்சிப் பிரதேச தடகளப் போட்டியில் தெரிவான சிறந்த வீரர், வீராங்கனைகள்

யாழ்ப்பாணம்,மே 12

தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான தடகளப் போட்டிகள் அண்மையில் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றன.

போட்டியில் தெரிவு செய்யப்பட்ட இவ் வருடத்திற்கான சிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளின் விவரம் வருமாறு,

100 மீற்றர் தூரத்தினை 11.90 செக்கனில் கடந்து முதலிடம் பெற்ற மீசாலை வீரசிங்கம் வி.கழகத்தைச் சேர்ந்த கே. நிருஜன் சிறந்த தட வீரராகவும் -

100 மீற்றர் தூரத்தினை 15.1 செக்கனில் கடந்து முதலிடம் பெற்ற மீசாலை வீரசிங்கம் வி. கழகத்தைச் சேர்ந்த வீ. நிரோஜினி சிறந்த தட வீராங்கனையாகவும் -

குண்டு போடுதல் போட்டியில் 13.13 மீற்றர் தூரம் எறிந்து முதலிடம் பெற்ற மட்டுவில் மோகனதாஸ் வி. கழகத்தைச் சேர்ந்த எம். பிரதீப்குமார் சிறந்த கள வீரராகவும் -

நீளம் பாய்தல் போட்டியில் 4.37 மீற்றர் தூரம் பாய்ந்து முதலிடம் பெற்ற மீசாலை வீரசிங்கம் வி. கழகத்தைச் சேர்ந்த வி. நிரோஜினி சிறந்த கள வீராங்கனையாக வும்-

மட்டுவில் மோகனதாஸ் வி. கழகத்தைச் சேர்ந்த எம். பிரதீப்குமார் சிறந்த மெய்வல்லுநராகவும் - தெரிவு செய்யப்பட்டு கேடயங்களைப் பெற்றனர்.

கடந்த வருடம் நடைபெற்ற தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியில் கலந்து பரிசு பெற்ற மட்டுவில் மோகனதாஸ் வி.க. வீரர் எம். பிரதீப்குமார், மாகாண மட்டப் போட்டிகளில் 5000 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலிடம் பெற்ற கொடிகாமம் துர்க்கா வி.க. வீராங்கனை ஆர். அனுஷியா ஆகியோர் யாழ். அரச அதிபரினால் சிறப்பு விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (1-207)

குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# விறு விறுப்பான உதை பந்தாட்டத்தில் ஹென்றீஸ் வென்று கேடயத்தை சுவீகரித்தது

வலி.வடக்கு,மே 12

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இளவாலை யங்ஹென்றீஸ் விளையாட்டுக்கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் நவாலி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகமும் இளவாலை யங்ஹென்றீஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் சம வலிமையுடன் மைதானத்தில் விளையாடினார்கள். இரு அணிகளின் ரசிகர்களுக்கும் மிகவும் உற்சாகமான போட்டியாகக் காணப்பட்டது. இந் நிலைமையில் சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகத்திற்கு யங்ஹென்றீஸ் அணியின் கோல்காப்பாளரின் எல்லைக்குள் செய்யப்பட்ட குற்றம் காரணமாக சுயாதீனமான (பனால்டி) உதையொன்று சென். பீற்றர்ஸ் அணிக்கு வழங்கப்பட்டது. இதனை உரிய முறையில் சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகம் பயன்படுத்தத் தவறியமை யங்ஹென்றீஸ் அணிக்கும் ஆதரவாளர்களுக்கும் பெரும் உற்சாகத்தை வழங்கியது. கோல்கள் எதனையும் இரு அணிகளும் பெறாத நிலையில் முதல் பாதி ஆட்டம் நிறைவு பெற்றது.

இரண்டாவது பாதி ஆட்டம் இரு அணிகளுக்கும் முக்கியமான பகுதியாக அமைந்தது.

இரு அணிகளும் கோல்கள் பெறும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டார்கள். யங்ஹென்றீஸ் விளையட்டுக்கழகம் தனக்கு கிடைத்த கோல்கள் பெறும் சந்தர்ப்பத்தையும் தவற விட்டது.

ஆட்ட முடிவில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாத நிலையில் ஆட்டம் நிறைவுற்றது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலையில் தவிர்ப்பு உதைகள் ஐந்து வழங்கப்பட்டன. யங்ஹென்றீஸ் விளையாட்டுக்கழகம் 04 உதைகளை கோலாக்கிக் கொண்ட போதிலும் நவாலி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகம் 03 உதைகளை மட்டுமே கோலாக்கியதைத் தொடர்ந்து யங்ஹென்றீஸ் விளையாட்டுக்கழகம் 04:03 என்ற கோல் கணக்கில் சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகத்தை வென்று சம்பியனாகியது. (86)

# யாழ்.வலய பாடசாலைத் தடகளப் போட்டி; சம்பியன் கிண்ணத்தைத் தட்டிச் சென்றோர்

யாழ்ப்பாணம்,மே12

யாழ்ப்பாணம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான தடகள விளையாட்டுப் போட்டிகள் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு மைதானதில் இடம்பெற்றன.



யாழ்ப்பாணம் கல்வி வலயப் பாடசாலைகளுக் கிடையே யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற தடகள விளையாட்டுப் போட்டிகளின் போது இடம்பெற்ற யாழ்.இந்துமகளிர் கல்லூரி ஆரம்பப் பிரிவு மாணவிகளின் உடற் பயிற்சிக் கண்காட்சியைப் படத்தில் காணலாம். (படம்:நேசன்)

இப் போட்டிகளில் சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரங்கள் வருமாறு:

**ஆண்கள்** : 11 வயது - குயின்ரன்ஸ் நிமல் நிமல்ராஜ் (புனித பத்திரியாசிரியர் கல்லூரி).

13 வயது - டெஸ்மன் ஜோய் ஆகாஷ் (யாழ். மத்திய கல்லூரி).

15 வயது - கிறிஸ்ரி ரஞ்சன் மடோன் எல்விஸ் (யாழ்.புனித பத்திரியாசிரியர் கல்லூரி).

17 வயது - யூனியன் பற்றிக் எரிக் பிரதாப், அருந்தவநாயகம் அன்ரன் நிதர்சன் (இருவரும் புனித பத்திரியாசிரியர் கல்லூரி).

19 வயது - எட்வேட் நவநீதன் (யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி)

21 வயது - தர்சன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி).

ஆண்களுக்கான இப் போட்டியில் யாழ். புனித பத்திரியாசிரியர் கல்லூரி 04 சம்பி யன்களையும் யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி 02 சம்பியன்களையும் யாழ். மத்திய கல் லூரி ஒரு சம்பியனையும் பெற்றுக் கொண்டுள்ளன.

**பெண்கள்** - 11 வயது - பிரியதர்சினி அருள்ஞான சுந்தரம் (யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரி).

13 வயது - சாருண்யா மகேந்திரன் (யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரி).

15 வயது - ஆர்த்திகா தர்மபாலன் (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை).

தர்சியா குணரத்தினம் (ஊரெழு கணேசா வித்தியாலயம்).

17 வயது - பானுஜா சத்தியசுதன் (யாழ்.இந்து மகளிர் கல்லூரி).

யசோதா சந்திரசேகரம் (கோப்பாய் வாதரவத்தை ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்).

19 வயது - நிர்த்திகா சம்பந்தநாதன், வாகினி இரகுநாதன் (இருவரும் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை).

கஜீத்தா விமலானந் (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி).

21 வயது - ஜெயதர்சினி அன்ரன் யோக நாதன் (யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம்).

இப் போட்டியில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி தலா 03 சம்பியன்களையும், ஊரெழு கணேசா வித்தியாலயம், யாழ். இந்து மகளிர் கல்லூரி, வாதரவத்தை ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம், யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் தலா ஒரு சம்பியன் கிண்ணத்தையும் பெற்றுக் கொண்டுள்ளன. (1-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**நகுலேஸ்வரி குகேந்திரன்**

தோற்றம் 26.05.1950 | மறைவு 16.05.2005

திதி 12.05.2008

கரையாத உங்கள் நினைவுடனே
காலமெலாம் வாழ்ந்திடுவோம்.

06, சந்தனமாதா கோயில் வீதி,
பாண்டியன் தாழ்வு, யாழ்ப்பாணம். (73949)

N.குகேந்திரன்-*கணவர்*,
K.பிருந்தாவன்-*மகன்*.


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

983 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

இடபம் **01 17 19 35**

09-05-2008

செல்லுபடியாகும் தொடர் இல. 5679696 - 5694632

ஜக்பொட் பரிசு ரூபா. 2,432,300/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 325,522 | 10/- | 3,255,220/- |
| 2 இலக்கங்கள் | 29,859 | 20/- | 597,180/- |
| 1 இல. + லக்கினம் | 29,574 | 30/- | 887,220/- |
| 2 இல. + லக்கினம் | 2,712 | 100/- | 271,200/- |
| 3 இலக்கங்கள் | 793 | 500/- | 396,500/- |
| 3 இல. + லக்கினம் | 84 | 5,000/- | 420,000/- |
| 4 இலக்கங்கள் | 5 | 100,000/- | 500,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,432,300/- | - |
| மொத்தம் | | | 6,327,320/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 388,554 | | 7,350,820/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 3,159,050/-

தொடர் இலக்கம் 4799614 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2008 மே 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மாத்தறை | 5681093-7-71 |
| கேகாலை | 5681344-2-89 |
| கொழும்பு | 5694196-6-11 |
| இரத்தினபுரி | 5683314-7-91 |
| அனுராதபுரம் | 5690691-2-29 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, செண் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 15 . 04 . 1926



இறைவன் அடியில் 24 . 04 . 2007

**அமரர் நமசிவாயம் இராஜகோபால்**

*(ஒய்வுபெற்ற உப-முகாமையாளர், இலங்கை வங்கி)*

கண்ணீரில் ஓராண்டு கரைந்து மறைந்ததப்பா
கண்முன்னே நீரில்லை நினைவு தொடருதப்பா
எண்ணாத நாளில்லை இதயத்தில் எப்போதும்
இறுதிவரை எம்மோடு இணைந்திருப்பீர் என்றிருந்தோம்
உறுதியுடன் கற்பக விநாயகனின் திருவடியைப் பற்றி நின்றீர்
காலங்கள் கடந்தாலும் உங்கள்
கனிமுகத்தின் ஞாபகங்கள் நித்தம் புதுமலராய் எங்கள்
நெஞ்சங்களில் பூத்துக் கொண்டே இருக்கும்.

"ஓம் சாந்தி சாந்தி சாந்தி"

இன்று (12.05.2008) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்பு மனைவி
திருமதி.சாந்திமதி இராஜகோபால்
*(ஒய்வு பெற்ற ஆசிரியை)*

கற்பகப்பிள்ளையார் கோயில் வீதி,
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.
T.P.2226348 (73898)

## விளக்கு வெடித்ததில் இளைஞனுக்கு எரிகாயம்

யாழ்ப்பாணம், மே12

விளக்குக்கு எண்ணெய் ஊற்றியபோது திடீரென விளக்கு வெடித்ததில் இளைஞன் எரிகாயங்களுக்கு இலக்கானார்.

இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை மட்டுவில் தெற்கில் இடம்பெற்றது. இச்சம்பவம் தொடர்பாகத் தெரியவந்துள்ளதாவது:

மோட்டார் சைக்கிளுக்கு விடுவதற்காக மண்ணெயுடன் பெற்றோல் கலந்து வைக்கப்பட்டிருந்ததை அறியாமல் அதனை விளக்குக்கு ஊற்றியபோதே இச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே இடத்தைச் சேர்ந்த தவராசா விதுர்சன் (வயது 18) என்னும் இளைஞர் எரிகாயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். (203-207)


### விற்பனைக்கு

எமது நிறுவனத்தில் வெற்று உரப்பைகளும், பலகைப் பெட்டிகளும் விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும்.

நியூ லங்கா ரேடேர்ஸ்,
222, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். (74019)

### கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு.

★ராஜீவ்-நவாலிவீதி,
ஆனைக்கோட்டை. (73573)


## உபகரணங்கள் வழங்கப்பட்டன

நல்லூர், மே12

இந்தியாவுக்கு இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்தவர்கள் 25 பேருக்கு ஐ.ஓ.எம் நிறுவனத்தின் உதவியுடன் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் தையல் இயந்திரம், மின் இணைப்பு வேலைகளுக்கான உபகரணங்கள் ஆகியவற்றை வழங்கியுள்ளது.

அகதிகள் புனர்வாழ்வு நிறவுனத் தலைவர் பேராசிரியர் ப.சிவ நாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 15 யுவதிகளும் 10 இளைஞர்களும் தொழில் சாதனங்களுக்கான உபகரணங்களைப் பெற்றுக் கொண்டனர். (203-111)

## வயோதிபர் காயம்

குடத்தனை, மே12

வீதியில் நடந்து சென்றுகொண்டிருந்தவரை பின்னால் வந்த மோட்டார்சைக்கிள் முட்டி மோதியது. இதனால் அவர் தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந் தார்.

கடந்த புதன் கிழமை மாலை 3.30 மணியளவில் பருத்தித்துறை, சிவன் கோயிலடிப் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் பருத்தித்துறை, புலோலி கிழக்கைச் சேர்ந்த கே.வினாசித்தம்பி (வயது 70) என்பவரே படுகாயமடைந்தவர் ஆவார்.

இவர் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டுள்ளார். (202-78)

## கோழிகளுக்கு அம்மை நோய்த்தடுப்பு மருந்து

கோழிகளுக்கு ஏற்படும் அம்மை நோயைக் கட்டுப்படுத்தும் முகமாக பருத்தித்துறை அரசினர் கால்நடை வைத்திய நிலையத்தில் எதிர்வரும் 25ஆம் திகதி காலை 8.30 மணிக்கு அம்மை நோய்த் தடுப்பு மருந்து கோழிகளுக்கு ஏற்படும்.

வடமராட்சிப் பகுதியில் கோழிப் பண்ணைகளை வைத்திருப்போர், சுயதொழிலாக வீடுகளில் கோழிகளை வளர்ப்போர் தடுப்பு மருந்தை கோழிகளுக்கு ஏற்றிக் கொள்ளுமாறு கால்நடை வைத்திய அதிகாரி சி. வசீகரன் கேட்டுள்ளார். (203-236)

### University of Jaffna

**Invitation to submit Expression of Interest (EOI) for Consultancy for construction of fume hoods and exhaust system in the Dept. of Chemistry, University of Jaffna**

Expression of interest for Consultancy for Construction of Fume Hoods and Exhaust System in the Dept. of Chemistry, University of Jaffna is invited From idividual (s)/ Firms.

The Bid documents can be obtained from the Local Technical Secretariat (LTS) ,IRQUE project, University of Jaffna up to 28th May 2008 at 2.00 pm on submission of the receipt for the peyment of a non refundable Deposit of Rs 200.00 made at the LTS.

Expression of Interest should be sent in sealed cover marked "Consultancy for Civil Works-Construction of Fume Hoods and Exhaust System" at the top left corner of the envelope, to the under signed on or before 30th May 2008 at 2.00 pm.

Director
L TS / University of Jaffna
09.05.2008


## கலாலயா
பயிற்சியகம்
( பெருமாள் கோயிலுக்கு அண்மையில் )

### மகளிருக்கான துரித 3 மாதகால பயிற்சிகள்

**கேக் அலங்காரம் :** பட்டர் ஐஸிங், றோயல் ஐஸிங், பாச்மண்ட் ஐஸிங், Frosting Icing, மாச்சீனி மலர்கள் (Sugar Flowers). Fondant ஐசிங், Water Icing.

**உணவு தயாரித்தல் :** பலவகையான உணவுகள், சிற்றுண்டிகள் சர்பத், ஐஸ்கிறீம், புடிங், சுப், மேசை அலங்காரம் செய்தல்.

**கூந்தல் அலங்காரம் :** பல வகையான கொண்டைகள் போடுதல், Dressing.

**பப்றிக் வர்ணம் தீட்டுதல் :** கைக்குட்டை, தலையணை உறை, கதிரை விரிப்புக்களில், சேலையில் (Saree Painting) கண்ணாடியில் வர்ணம் தீட்டுதல்.

**கை வேலை :** கம்பளி நூல் வேலை, பஞ்சில் பொம்மைகள் செய்தல் (Soft Toys) கழிவுத் துணிகளில் வேலைப்பாடுகள், றிபன் வேலை, மற்றும் பல.

**பூ வேலை :** கடதாசியினாலும் Paper Ribbon ஆலும் மலர்கள் செய்தல், மலர்ச் செண்டுகள் (Bouquet) செய்தல், கயாபா றிபன் மலர்கள் செய்தல்.

**Facial :** அடிப்படை முக அழகுக்கலையும் மணப்பெண் அலங்காரமும் (அடுத்தமாத நடுப்பகுதியில் ஆரம்பமாகிறது.)

### 6 மாதகால உடை தயாரித்தல் (தையற் கலை) பயிற்சிகள்

அடிப்படைத்தையலுடன் குழந்தைகள், சிறுவர், மகளிருக்கான ஆடைகள், சாரிபிளவ்ஸ், சுரிதார் தைத்தல், பூப்போடுதல்.

- 3 பாடங்களுக்கு மேல் பயில்பவர்கள் தவணைமுறையில் கட்டணம் செலுத்தலாம்.
- இப் பயிற்சிக்கு வயதெல்லை கிடையாது.
- பயிற்சிகள் முடிந்தபின்னர் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

சனி ஞாயிறு புதிய வகுப்புக்கள் ஆரம்பம் : 18-05-2008
கிழமைநாள் புதிய வகுப்புக்கள் ஆரம்பம்: 19-05-2008

*மேலும் விபரங்களை வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில் பி.ப 1.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.* பதிவாளர்.

### ஐம்பதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு விசேட விலைக்கழிவு
### மே 31 வரை மட்டுமே

பாடசாலை அதிபர்களே!
மாணவமணிகளே!
நாடுங்கள்......

- பாடசாலை, பல்கலைக்கழகப் பாடப்புத்தகங்கள்
- புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்கள்
- பாடசாலை உபகரணங்கள்
- தர உள்ளீட்டுப் பொருள்கள், மூலதனப் பொருள்கள்
- வாத்தியக் கருவிகள்
- அழிபொருள்கள்
- நுணுக்குக்காட்டிகள்
- கணனி நூல்கள்
- விளையாட்டுப் பொருள்கள்
- ஆய்வுகூட உபகரணங்கள்
- ஆய்வுகூட இரசாயனப் பொருள்கள்
- அலுவலக அலுமாரிகள், புத்தக றாக்கைகள்
- O.H.P புறொஜெக்ரர்கள், றோணியோ மெசின்கள்
- மனித உடற்கூறுகளின் கனவுருத் தொகுதிகள்

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

10% முதல் 50%வரையான விசேட விலைக் கழிவு

*யாவற்றையும் நீங்களே தெரிவுசெய்து பெற்றுக்கொள்ள நாட வேண்டிய ஒரே இடம்:*

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
*212, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.* (சி/552800)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருக்கும் வளத்தை வைத்து மனநிறைவுடன் செயற்பட்டுவரும் சங்குவேலி அ.த.க.பாடசாலை



பாடசாலையின் அதிபர்
கா. அ. ஜெயக்குமார்

பாடசாலைப் பிள்ளைகள் ஒவ்வொருவரிலும் அதிபரும் ஆசிரியர்களும் எந்தளவுக்கு அக்கறையுடன் இருக்கின்றார்கள் என்பதற்கு அத்தாட்சி அதிபரின் வாசலில் நாளாந்தம் பிள்ளைகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டு பிறந்தநாள் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றமையாகும்.



பாடசாலையின் முகப்புத் தோற்றம்

சங்குவேலி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, உடுவில் கல்விக்கோட்டத்திற்கு உட்பட்ட ஒரு பாடசாலையாகும்.

இப்பாடசாலை கிராமப்புறத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்ற போதிலும் தனது கடமையைப் பொறுப்புடன் செய்து இருக்கின்றதென்றால் மிகையாகாது.

பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றும் கா. அ. ஜெயக்குமாரிடம் இப்பாடசாலை பற்றிக் கேட்டோம். அதன் போது அவர் கூறிய கருத்துகள் வருமாறு:-

பாடசாலையில் எவையும் இல்லையென்று கூறுவதில் கவனம் செலுத்துவதிலும் பார்க்க இருப்பவற்றை வைத்து மன நிறைவுடன் கடமையாற்றுவதில் கூடிய அக்கறை எமக்கு உள்ளது.

பௌதீக வளங்கள் போன்றவற்றில் பற்றாக்குறைகள் காணப்பட்டாலும் கற்பித்தலுக்கு இவையொன்றும் பெரிய தடைகள் இல்லை யென்பதில் தெளிவாக உள்ளோம்.

பாடசாலைக்கும் பெற்றோர்கள், பழைய மாணவர்கள் மற்றும் அதிபர், ஆசிரியர்களுக்கும் இடையில் சிறந்த சுமுக உறவு காணப்பட வேண்டும்.

கடந்தாண்டு இடம்பெற்ற கற்பித்தல் சாதன ஆசிரியர் ஆக்கத்திறன் போட்டியில் ஆசிரியர் செல்வி தி. அ.ஜெயந்தினியால் தயாரித்து வெளியிடப்பட்ட "நாமும் போக்குவரத்தும்" என்ற இறுவட்டு வலிகாமம் வலய மட்டத்தில் சிறப்புப் பரிசு பெற்றமை பாடசாலையின் அதிபர், ஆசிரியர்களின் வெற்றிக்கு ஓர் அடிநாதமாகும்.

தரம் ஒன்று தொடக்கம் தரம் ஐந்து வரையான வகுப்புக்களைக் கொண்டுள்ள இப்பாடசாலை 92 மாணவர்களுடன் இயங்கி வருகின்றது.


அதிபருடன் ஐந்து ஆசிரியர்களும் ஒரு தொண்டர் ஆசிரியருமாக மொத்தம் ஏழு பேர் பாடசாலையில் மாணவர்களின் கல்விச் செயற்பாட்டில் ஈடுபடுகின்றனர்.

பாடசாலைகளில் நிலவும் ஆங்கில ஆசிரியர் இல்லையென்ற குறைபாடு இந்தப் பாடசாலையையும் விட்டுவைக்கவில்லை.

அதிபரின் முயற்சி, ஆசிரியரின் ஒத்துழைப்பு ஆகியவற்றால் சங்கீத ஆசிரியர் மாணவர்களுக்கு ஆங்கில பாடத்தைக் கற்பித்து வருகின்றார். இது ஓரளவு ஆங்கில ஆசிரியர் இல்லை என்ற குறையை நிவர்த்தி செய்துள்ளது.

பாடசாலைக் கட்டடத் தொகுதி பழமையானதாக இருக்கின்ற போதிலும் இயன்றளவு அதனை சீர் செய்து ஒழுங்கமைத்து மன நிறைவுடன் வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

மண்டபம் மறைப்புக்களால் வகுப்பறைகளாகப் பிரிக்கப்பட்டு அங்கு வகுப்புக்கள்




நடத்தப்பட்டு வருகின்றன.

கல்விக் கோட்டம், கல்வி வலயம் ஆகியவற்றின் பணிப்பாளர்களும் ஏனைய அதிகாரிகளும் வேண்டிய உதவிகளைச் செய்து வருகின்றமை சுட்டிக் காட்டக் கூடியதாகும். அத்துடன் அரச சார்பற்ற நிறுவனங்களும் பல்வேறு உதவிகளை வழங்கியுள்ளன.

தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில், பின் தங்கிய பகுதியில் இந்தப் பாடசாலை இருக்கின்றமை, பாதிப்பு எதனையும் ஏற்படுத்த வில்லையென்றே குறிப்பிடலாம்.

பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 64 வீதமான மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளதுடன் 18 வீதமானவர்கள் பரீட்சையில் சித்தியடைந்தும் உள்ளனர்.

ஆனந்த குமாரசாமி கோகுலன் 155 புள்ளிகளையும், நலரஞ்சன் ரஜீபன் 143 புள்ளிகளையும் பெற்று சித்தி அடைந்துள்ளார்கள்.

ஐந்து மாணவர்கள் 107 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுள்ளார்கள்.

தமிழ்த்தினப் போட்டிகள், திருமுறை ஓதல், ஆங்கிலப் போட்டிகள், வரைதல் போட்டிகள் என்பவற்றிலும் கலந்து கொண்டு தமது திறமைகளை மாணவர்கள் வெளிப் படுத்தி வருகின்றார்கள்.

இதே போன்று சஞ்சிகைப் போட்டி, ஆசிரியர்களின் கற்றல் கற்பித்தல் ஆக்கத்திறன் போட்டி என்பவற்றிலும் கலந்து கொள்வதுடன் பரிசில்களையும் பெற்று வருகின்றனர்.

## ஒவ்வொரு மாணவரதும் பிறந்தநாளை தெரிந்துவைத்து வாழ்த்துக்கூறும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள்

பாடசாலைக்கென வசதியாக ஒரு விளையாட்டு மைதானம் இல்லாத போதிலும் மாணவர்கள் போட்டிகளில் பங்குபற்றி வருகின்றனர். பரிசளிப்பு விழா உட்பட ஏனைய சமய நிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றன.

பாடசாலைச் சுற்றாடலில் உள்ள மாணவர்களில் பெருமளவானோர் தமது பாடசாலை என்ற உணர்வுடன் கற்று வருகின்றனர்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பாடசாலைக்கு வேண்டிய முழுமையான ஒத்துழைப்பை வழங்கி வருகின்றது.

பழைய மாணவர் சங்கம் இல்லாத போதிலும் பழைய மாணவர்கள் இணைந்து உதவிகள் புரிந்து வருகின்றனர்.

1901 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை (1901.07.01) இன்று 107 வருடங்கள் கடக்கும் நிலையில் உள்ளது. ஆரம்பத்தில் கா. வைத்திலிங்கம் என்பவரினால் திண்ணைப் பாடசாலையாக அமைக்கப்பட்டு சுப்பிரமணிய வித்தியாசாலை என்ற பெயரில் விளங்கிய இப்பாடசாலை 1961 ஆம் ஆண்டு அரசினால் பொறுப்பேற்கப்பட்டு சங்குவேலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையாகப் பெயர் மாற்றப்பட்டு இயங்கி வருகிறது.

தற்போதைய அதிபர், ஆசிரியர்கள் சில நடவடிக்கைகளை எதிர்கால நன்மை கருதி மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்களின் ஆவணங்கள் மூலம் இதனை அறியக் கூடியதாக இருக்கின்றது.

பாடசாலை ஆரம்பப் பாடசாலையாக இருக்கின்றமையால் மகிழ்ச்சிகரமான கற்றலுக்கு உகந்த முறையில் சிறுவர் பூங்கா அமைக்கும் நடவடிக்கையில் ஒரு பகுதி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

வகுப்பறைத் தளபாடங்களும் வர்ணம் பூசப்பட்டு அழகுபடுத்தப்பட்டுள்ளன.

மேலதிக வேலைகள் செய்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மாணவர்கள் இன்றைய கல்வி முறைக்கு ஏற்ப கற்பித்தல் நடவடிக்கைகளுக்குத் தயாராக ஆசிரியர் குழாம் காணப்படுகின்றது.

இவ்வாறு ஓரளவு நிறைவுடன் காணப்படும் இப்பாடசாலையின் அலுவலகத் தேவைக்குக் கூட இன்னும் ஒரு கணனியும் இல்லை என்பது குறையாகவே உள்ளது.

எனவே இதனைப் பெற்றுக் கொடுக்க உரியவர்கள் முன்வர வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அத்துடன் பாடசாலையின் ஏனைய தேவைகளும் நிறைவேற்றப்பட வேண்டியது உரியவர்களின் கடமை என்றே கூற முடியும்.

ஒரு பாடசாலையின் வளர்ச்சிக்கு பாடசாலைக் கட்டடங்களே முதன்மையானவையாக உள்ளன.

இந்நிலையில் எமது பாடசாலைக்குரிய கட்டடங்கள் உரியவகையில் புனரமைப்புச் செய்யப்பட வேண்டியது அவசியமாகிறது - என்றார் அதிபர். *

- புங்கவன் -



பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலய மாணவர்களுக்கு வாரத்தில் ஒருநாள் பசுப்பால் வழங்கும் திட்டத்தைப் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா தேவாச்சிரமம் ஆரம்பித்துள்ளது.

இந்த நிகழ்வின் ஆரம்ப விழாவில் கலந்துகொண்ட பருத்தித்துறைப் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன், அரசின் கால்நடை வைத்திய அதிகாரி சி.வசீகரன் ஆகியோர் மாணவர்களுக்கு பால் வழங்குவதையும், சுவாமி சித்ருபானந்தா, அதிபர் அ.சா.அரியகுமார் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (236)




பிரான்பற்று கலைமகள் வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா அண்மையில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராக் கலந்துகொண்ட வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் உரையாற்றுவதையும் பாடசாலை அதிபர் வே.சிவசுந்தரம் மற்றும் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம்.



சாவகச்சேரி வை.எம்.சி.ஏ.உறுப்பினர்கள் நேற்று முன்தினம் கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டிருந்தனர். உதயன் அலுவலகத்திற்கும் வருகை தந்தனர். அதன்போது எடுக்கப்பட்ட படம்.



வவுனியா வடக்கு வலய ஒமந்தைக் கோட்டப் பாடசாலைகளுக் கிடையிலான தடகளப் போட்டிகள் புதுக்குளம் மகாவித்தியாலய மைதானதில் அண்மையில் இடம் பெற்றன.

நிகழ்வில் ஒமந்தைக் கோட்ட பாடசாலை அதிபர்கள் தமது பாடசாலைக் கொடிகளை ஏற்றுவதை முதலாவது படத்திலும் ஒமந்தை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ந. அரியரத்தினம் உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையில் சிறுகுறைபாடுகள் இருந்தாலும் அவற்றைச் சவாலாக ஏற்று வாழ வேண்டும்

## அரச அதிபர் கூறுகிறார்



மந்திகை,மே12

வாழ்க்கையில் சிறுசிறு குறைபாடுகள் இருப்பினும் அவற்றை எல்லாம் சமாளித்து சவாலாக ஏற்று வாழ்க்கையை கட்டி எழுப்ப வேண்டும்.

பருத்தித்துறை இந்து இளைஞர் சங்கம் சமயப் பணியுடன் சமுதாய மேம்பாட்டுப் பணியையும் மேற்கொண்டு வருவது பாராட்டிற்குரியது. விசேட தேவை உள்ளவர்களின் தேவைகள் இனம் காணப்பட்டு அவை பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

பருத்தித்துறை இந்து இளைஞர் சங்கம் யாழ்.றோட்டறிக்கழகம், வடமராட்சி லயன்ஸ் கழகம், வடமராட்சி வங்கியாளர், பருத்தித்துறை வங்கிச் சதுக்க வர்த்தகர்கள் ஆகியோரின் அனுசரணையுடன் செவிப்புலனற்றோர்களுக்கு நடத்திய ''உழைப்போம் வாழ்வோம்'' கருத்தரங்கிலே பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

புலோலி பசுபதீஸ்வரர் ஆலய கலா மண்டபத்தில் நடைபெற்ற இக் கருத்தரங்கிற்கு யாழ்.றோட்டறிக் கழகத் தலைவர் கே.பாலசுப்பிரமணியம் தலைமை வகித்தார்.

வடமாராட்சி செவிப்புலனற்றோர் நிறுவனத் தலைவர் ரீ.செந்தில்குமார் மங்கள விளக்கேற்றிக் கருத்தரங்கை ஆரம்பித்து வைத்தார்.

பசுபதிஸ்வரர் ஆலய பிரதம குரு. சிவஸ்ரீ எஸ்.சிவனேசக் குருக்கள் ஆசி வழங்கினார்.

நிகழ்வில் தொடர்ந்து அரச அதிபர் க.கணேஸ் உரையாற்றுகையில்:

இன்றைய கால கட்டத்தில் மனிதர்கள் ஒவ்வொருவரும் சமூக சேவகர்களாக செயற்பட வேண்டியது முக்கியமாகும்.

நாட்டில் ஏற்பட்ட பல்வேறுபட்ட அனர்த்தங்கள் மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட அனர்த்தங்கள் - இயற்கை அனர்த்தங்கள் என்பனவற்றினால் ஒவ்வொரு மனிதனும் ஏதோ வகையில் பாதிக்கப்பட்டுள்ளான்.

விசேட தேவைகள் உள்ளவர்களை இனங்கண்டு அவர்களுக்குச் சேவையாற்றி அவர்களுக்கு வாழ்க்கையின் நல்வழி காட்ட வேண்டும் என்ற புனித நோக்கோடு இக் கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

இந்து சமய நிறுவனங்கள் ஏனைய சமயங்களோடு ஒப்பிடும்போது இது போன்ற சமுதாய மேம்பாட்டு நடவடிக்கையில் ஈடுபடுவது குறைவு என்ற எண்ணம் நிலவுகின்றது.

ஆனால், பருத்தித்துறை இந்து இளைஞர் சங்கம் இதில் முன்னணியில்தான் திகழ்கின்றது.

விசேட தேவை உள்ளவர்கள் என்று கூறும்போது நலிவுற்றோர், வருமானமிருந்தும் நல்வாழ்வு வாழ முடியாத குடும்பங்கள் ஆகியன அடங்குகின்றன.

இவர்களுக்குத் தொண்டாற்றும் தொண்டர்களாக ஒவ்வொருவரும் வாழ வேண்டும். இவ் விசேட தேவை உள்ளவர்களின் தேவைகளை இனங்காண விசேட ஆற்றல் பெற்ற புலமையாளர்கள் இருக்கின்றனர்.

அத்தோடு சமூக சேவைத் திணைக்களம், பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்கள், அரச நிறுவனங்கள் இயங்குகின்றன. இந்த எல்லா சக்திகளையும் ஒருங்கிணைத்து விசேட தேவை உள்ளவர்களின் தேவைகளை இனங்கண்டு, அவர்களைச் சொந்தக் காலில் நிற்கத் திட்டங்கள் வகுக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட வேண்டும்.

விசேட தேவை உள்ளவர்களும் தங்களுக்காகப் பணியாற்ற அர்ப்பணிப்புடனும் சேவை மனப்பான்மையுடனும் தொண்டர்களும், தொண்டு நிறுவனங்களும் உண்டு என்ற செய்தியை உணர்ந்து கொள்ள வேண்டும்.

இவர்களில் யுத்த அனர்த்தங்கள், இயற்கை அனர்த்தங்கள், ஏனைய வன்செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பிரதேச செயலகங்கள் மூலம் வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

பாதிக்கப்பட்டவர்களுக்கான வீட்டுத் திட்டங்களில் பாதிக்கப்பட்ட விசேட தேவை உடையவர்களுக்கு 10 வீத ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இது சம்பந்தமாக பிரதேச செயலர்களுடன் தொடர்பு கொள்ளலாம். நலிவுற்றோர்களுக்கு உலக உணவுத் திட்டமும் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

நல்லாட்சி நிலவும் போது மக்கள் அமைதியுடனும் சமாதானத்துடனும் வாழ முடியும். நல்லாட்சிக்கு வழி சமைக்கும் தொண்டு நிறுவனங்கள், அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் இலட்சியம் நிறைவேறச் சிறப்பாக செயற்பட வேண்டும் - என்றார்.

(203-218)

## கூட்டம் ரத்து

இன்று நடைபெறவிருந்த வட்டுக்கோட்டை தெற்கு மாதர் அபிவிருத்திச் சங்கத்தின் கூட்டம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது என யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்தார்.

பொதுமக்களின் வேண்டு கோளுக்கிணங்க மேற்படி சங்கத்தின் கூட்டம் விடுமுறை தினத்தில் நடத்தப்பட வேண்டியுள்ளதாலேயே கூட்டம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (202)

## மாடு தாக்கி இளைஞன் காயம்

யாழ்ப்பாணம்,மே,12

வீதியில் நடந்து சென்ற இளைஞர் களை காளைமாடு துரத்தித் தாக்கியதில் இளைஞர் ஒருவர் காயமடைந்தார்.

இச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை சரசாலையில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த என். விஜயரூபன் (வயது 26) என்பவர் காளைமாட்டினால் தாக்கப்பட்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (203-201)

## மூளாய் வைத்தியசாலையின் இலவச சேவைகள்

சுழிபுரம்,மே12

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை ஐக்கிய சங்க நிர்வாகத்தினர் வாரம் தோறும் கிராமம் கிராமமாக இலவச வைத்திய பரிசோதனைகளை வைத்திய நிபுணர்கள் மூலமாக நடத்தி மருந்து வகைகளையும் ஆலோசனைகளையும் நோயாளர்களுக்கு வழங்கி வருகின்றனர்.

இப்பணிக்கு வேண்டிய உதவிகளை ஊர் மக்களும், வெளிநாட்டு அமைப்பினரும் வழங்கி வருகின்றனர்.

சுழிபுரம் பாண்டைவட்ட கிராமத்தில் உள்ள இருநூறுக்கும் அதிகமான மக்கள் கடந்த வாரம் நடைபெற்ற நோய்ப்பரிசோதனையில் கலந்து கொண்டனர். (203-28)

## 01.05.2008 உதயனில் வெளியான தரம் 5 புலமைப்பரிசில் இவகுவழிப் பயிற்சி - 2 இன் வினாத்தாள் II இற்கான விடைகள்

01. 01- 04 வரை சரியாக ஒழுங்கமைத்த வாக்கியங்கள்.
02. 1) 1) தந்தை தாய். 2) தருமம். 3) கருமம். 4) தொண்டு. 5) இயற்றும்.
2) 1) அதர்மம். 2) மறக்க. 3) முடியும். 4) அழித்தல்.
3) 1) 2 2) 2 3) 2
4) 1) தந்தை. 2) கன்று/பசு. 3) நீங்கள். 4) நாங்கள்.
03. 1) ரூபா 100 2) ரூபா 50
3) நிதிமந்திரி, மத்தியவங்கி ஆளுனர்.
4) ரூபா 5, ரூபா 2, ரூபா 1
04. 1) 0.9, 1.1 2) 18 3) ரூபா 134
05. 1) 1l 600ml 2) 4 மணித்தியாலங்கள்.
3) 52 4) 48
06. C, D, A, E, B, F
07. E, C, F, D, A, B
08. B, A, E, D, C, F
09. A, D, C, B, E
10. சரியான கருத்துடைய வாக்கியங்கள்.

## 06.05.2008 உதயனில் வெளியான தரம் 5 புலமைப்பரிசில் இவகுவழிப் பயிற்சி - 3 இன் வினாத்தாள் I இற்கான விடைகள்

01) 1 02) 2 03) 1 04) 2 05) 1 06) 3 07) 1 08) 2 09) 3
10) 1 11) 3 12) 3 13) 1 14) 2 15) 3 16) 1 17) 2 18) 3
19) 2 20) 1 21) 3 22) 1 23) 2 24) 1 25) 2,3
26) 2 27) 3 28) 2 29) 1
30-39 வரையான வினாக்களுக்கு கருத்துடைய வாக்கியங்கள்.
40) ஆறு. 41) குளம். 42) விடுகதை. 43) பம்பரம்.
44) நாடகம். 45) குடை. 46) ஆடல். 47) குடும்பம்.
48) படகு.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை அதிபர்
ம.செபஸ்தியாம்பிள்ளை
அவர்களின் அன்புத் தந்தை
**போனம்பிள்ளை மனுவேற்பிள்ளை**

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதோடு, அவரின் குடும்பத்தினருக்கு எமது உள்ளம் நெகிழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்திக்கின்றோம்.


ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
கல்விசார ஊழியர்கள்.

யா/சென்.மேரிஸ் வித்தியாலயம் (O.L.R)
4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

(74029)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 10 ✱ 07 ✱ 1941



இறப்பு 24 ✱ 04 ✱ 2007

## அமரர் இராசு யோகலிங்கம்

*திதி: பூர்வபக்க அட்டமி (12.05.2008)*

'ஆண்டு ஒன்று சென்றதப்பா
எம்மை விட்டு நீங்கள் பிரிந்து
ஆறவில்லை உங்கள் பற்றிய நினைவு
ஆயிரம் உறவுகள் எம்மருகில்
இருந்தாலும் அவை அனைத்தும்
உங்கள் அன்புக்கு ஈடாகுமா?

அண்ணா சிலையடி,
கரணவாய், கரவெட்டி.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(74028)

## வீதிகள் சேதம்; கவனிப்பார் இல்லை

உரும்பிராய் கிழக்குப் பகுதியிலுள்ள பல வீதிகள் கடந்த பல வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாமல் குன்றும் குழியுமாக இருப்பதால் பயணத்தை சீராக மேற்கொள்ள முடியாது மக்கள் பெரும் சிரமங்களைஎதிர்கொண்டு வருகின்றனர்.

றோமன் கத்தோலிக்க பாடசாலை வீதி, சென்.மைக்கேல் தேவாலய வீதி மற்றும் காட்டு வைரவர் கோயில் வீதி உட்பட பல வீதிகளே இவ்வாறு திருத்தப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றன.

மழை காலங்களில் இவ் வீதியால் பயணம் செய்யும் மாணவர்களும் பொதுமக்களும் பெரும் அவலங்களை சந்திப்பதுடன் விபத்துக்களை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கும் ஆளாகி வருகின்றனர். உரியவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

(203-288)

## தவறிவிட்டது

சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி என்னும் முகவரியைச் சேர்ந்த இந்துமதி அருணாசலம் என்பவரது தேசிய அ.அட்டை (708181617V) விசேட அ.அட்டை என்பன 10.05.2008 அன்று கோண்டாவிலுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இ.ஸ்ரீஸ்கந்தராஜா, பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் [illegible] கடை) என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (74026)

## மரண அறிவித்தல்

### கந்தையா செல்லையா (ஆசாரியர்)



அல்வாய் தெற்கு, அல்வாயைப் பிறப்பிடமாகவும், 'சித்தம்பாதி' கரணவாய் தெற்கு, கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா செல்லையா அவர்கள் 04.05.2008 ஞாயிறன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அசுபதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை - அசுபதி தம்பதியரின் மருமகனும் யாகேஸ்வரியின் அன்புக் கணவரும் செல்வராணி, மெய்யழகன் (கனடா), தெய்வஞானியம்மா, கதிரமலை (சுவிஸ்), கந்தையா (ஸ்ரீ - சுவிஸ்), வேலழகன் (அமரர்), அசுபதி (கனடா), செல்வச்சோதி (கனடா), சிவவளசியம்பாள் (நிம்மி), மதிவதனி (அமரர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வடிவேற்கரசு, வைத்தீஸ்வரன் (அமரர்), இராசவரோதயம், மோகனதாஸ் (கனடா), யோகேஸ்வரன் (சின்னத்தம்பி), பத்மாவதி (கனடா), ஜெகதீஸ்வரி (சுவிஸ்), நாகநந்தினி (சுவிஸ்), கலைச்செல்வி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் தேவசுதா, நிதியா (அமரர்), குகதர்சினி (கனடா), விநோத் (கனடா), தசரதன் (டோகா), மயூரதன் (ஜேர்மனி), கௌசல்யா, அங்கிதரன், அமீரா, துஷாந்தன் (சுவிஸ்), கிருபா (சுவிஸ்), சுதர்சன் (சுவிஸ்), கவியரசி (சுவிஸ்), நிரோஜன் (சுவிஸ்), அங்கித் (கனடா), தனுஷ் (கனடா), பபிலா (கனடா), தீபிகா (கனடா), தனுஷ்கா (கனடா) மற்றும் பார்தீபன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பாட்டனாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (13.05.2008) செவ்வாய்க்கிழமை மு.ப 11 மணிக்கு அவரது இல்லத்தில் (கரணவாய்) நடைபெற்று பூதவுடல் கிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

''சித்தம்பாதி''
கரணவாய், கரவெட்டி. (74027)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலாஜி 'ஹட்ரிக்'; சென்னை வெற்றி!



பாலாஜி

சென்னை, மே 12

தமிழக வீரர் பாலாஜி ஐ.பி.எல். தொடரின் முதல் 'ஹட்ரிக்' சாதனையை நிகழ்த்த, சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியை 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது. அணித்தலைவர் டோனி மற்றும் பத்ரிநாத்தின் அதிரடி அரைச்சதங்களும் சென்னை அணியின் வெற்றிக்கு பக்கபலமாக இருந்தன.

ஐ.பி.எல். ருவென்ரி/20 விறுவிறுப்பாக நடக்கிறது. நேற்றுமுன்தினம் சென்னையில் நடந்த லீக் போட்டியில் டோனியின் சென்னை சுப்பர் கிங்ஸ், யுவராஜ் தலைமையிலான கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிகள் மோதின. சென்ன்னை அணியில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை. நாணயச் சுழற்சியில் வென்ற யுவராஜ் முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

சென்னை அணி தொடக்கத்தில் தடுமாறியது. சிறிசாந்த் வீசிய முதல் ஓவரில் இரண்டு பவுண்டரிகள் அடித்த வித்யூத் 8 ஓட்டங்களுடன் அதே ஓவரில் சிலிப் திசையில் நின்ற மஹேலவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இன்னொரு தொடக்க வீரரான பிளமிங்(1), சிறிசாந்தின் வேகத்தில் வீழ்ந்தார். இதற்குப் பின் சுரேஷ் ரெய்னா, பத்ரிநாத் இணைந்து கலக்கினார். சிறிசாந்த் வீசிய 5ஆவது ஓவரில் பத்ரிநாத் அடுத்தடுத்து பவுண்டரிகள் விளாசினார். வி.ஆர்.வி.சிங் வீசிய அடுத்த ஓவரில் ரெய்னா ஒரு பவுண்டரி, பத்ரிநாத் ஒரு சிக்ஸர் அடித்தனர். பியூஸ் சாவ்லா வீசிய 7ஆவது ஓவரின் முதலிரண்டு பந்துகளில் இரண்டு பவுண்டரிகள் விளாசிய ரெய்னா(26), ஐந்தாவது பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த அணித்தலைவர் டோனி அதிரடியாக விளையாடினார். இவரிடம் இளம் பியூஸ்சாவ்லாதான் அதிகமாக 'அடி' வாங்கினார். சாவ்லா வீசிய 9ஆவது ஓவரில் ஒரு சிக்ஸர் அடித்த டோனி, 11ஆவது ஓவரில் அடுத்தடுத்து இரண்டு இமாலய சிக்ஸர்கள் விளாசினார். மறுபக்கம் பத்ரிநாத்தும் வாணவேடிக்கை காட்ட ஓட்டஎண்ணிக்கை 'ஜெட்' வேகத்தில் உயர்ந்தது. இர்பான் பதான் வீசிய 13ஆவது ஓவரில் பத்ரிநாத் இரண்டு சிக்ஸர்கள் அடிக்க சென்னை ரசிகர்கள் உற்சாகத்தில் மிதந்தனர். ஒரு கட்டத்தில் டோனியை மிஞ்சிய பத்ரிநாத் மின்னல் வேகத்தில் அரைச்சதம் கடந்து அசத்தினார். இவர் வி.ஆர்.வி. சிங் பந்தில் 64 ஓட்டங்களுடன் (6 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள்) ஆட்டமிழந்தார்.

தனது அசத்தல் ஆட்டத்தைத் தொடர்ந்த டோனி, ஹோப்ஸ் பந்தில் ஒரு அபார சிக்ஸர் அடித்து அரைச்சதம் கடந்தார். சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 181 ஓட்டங்கள் எடுத்தது. டோனி 60 ஓட்டங்களுடன்(2 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள்) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

கடின இலக்கை விரட்டிய பஞ்சாப் கிங்ஸ் லெவன் அணி, சென்னை பந்துவீச்சாளர்களின் வேகத்தில் ஆடிப் போனது. கோனி வீசிய முதல் ஓவரில் ஒரு சிக்ஸர், ஒரு பவுண்டரி விளாசிய ஹோப்ஸ்(14) அதிக நேரம் நீடிக்கவில்லை. இவர், மோர்கீலின் பந்துவீச்சில் டோனியின் துடிப்பான பிடியெடுப்பில் வெளியேறினார். கோனி வேகத்தில் கோயல் (1) வீழ்ந்தார். ஒரு பக்கம் விக்கெட் சரிந்தாலும், ஷோன் மார்ஷ் மட்டும் போராடினார். பழனி அமர்நாத் வீசிய 9ஆவது ஓவரில் இரண்டு சிக்ஸர்கள் விளாசினார். பாலாஜி, முரளிதரன் ஆகியோரின் பந்துவீச்சுக்களிலும் சிக்ஸர் அடித்து அரைச்சதம் கடந்தார்.

இந்த நேரத்தில் 13ஆவது ஓவரை வீசிய தமிழக வீரர் பாலாஜி கலக்கினார். முதல் பந்தில் சர்வானை(20) 'போல்ட்' ஆக்கினார். 5ஆவது பந்தில் மார்ஷை(58) வெளியேற்றி 'இரட்டை அடி' கொடுத்தார். அடுத்த ஓவரில் பழனியின் பந்துவீச்சு பஞ்சாப் அணிக்கு அதிர்ச்சி கொடுத்தது. முதல் பந்தில் அபாயகரமான யுவராஜை(2) பவிலியனுக்கு அனுப்பி வைத்தார். மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இவர் வெளியேற, பஞ்சாப் அணியின் வாய்ப்பு முழுமையாகத் தகர்ந்தது. முரளிதரன் சுழலில் ஒரு சிக்ஸர் அடித்த ஜெயவர்த்தன (8), அதே ஓவரில் விக்கெட்டைப் பறிகொடுத்தார். பின்னர் இர்பான் பதான், பியூஸ் சாவ்லா இணைந்து போராடினர்.

கடைசி ஓவரில் 27 ஓட்டங்கள் எடுக்க வேண்டும் என்ற சிக்கலான நிலை பஞ்சாப் அணிக்கு ஏற்பட்டது. அருமையாக பந்துவீசிய பாலாஜி 'ஹட்ரிக்' சாதனை நிகழ்த்தி வெற்றியை உறுதி செய்தார். போராடிய பதான் 40 ஓட்டங்களுக்கு(3 சிக்ஸர்கள், 3 பவுண்டரிகள்) ஆட்டமிழந்தார். சாவ்லா 17 ஓட்டங்களை எடுத்தார். கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 163 ஓட்டங்களை மட்டும் எடுத்து தோல்வி அடைந்தது. 5 விக்கெட்டுகளை வீழ்த்திய பாலாஜி ஆட்ட நாயகன் விருதைத் தட்டிச் சென்றார்.

## முதன் முறையாக....

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் கடைசி ஓவரில் பஞ்சாப் அணி 27 ஓட்டங்கள் எடுக்க வேண்டும். பாலாஜி அனல் பறக்க பந்துவீசினார்.

✱ முதல் பந்தில் இர்பான் பதான் இமாலய சிக்ஸர் அடிக்க பதற்றம் எகிறியது.

✱ இரண்டாவது பந்தில் இரண்டு ஓட்டங்கள் தான் கிடைத்தன.

✱ 3ஆவது பந்தை பதான் தூக்கி அடிக்க, ரெய்னா அதைப் பிடியெடுக்க சென்னை அணிக்கு நம்பிக்கை பிறந்தது.

✱ 4ஆவது பந்தை பியூஸ் சாவ்லா அடிக்க, கப்புகெதர அபார பிடியெடுக்க சென்னை ரசிகர்கள் உற்சாகமாயினர்.

✱ 5ஆவது பந்தில் சாதித்தால் தொடர்ந்து 3 விக்கெட்டுகள் வீழ்த்தி 'ஹட்ரிக்' சாதனை படைக்கலாம். பந்தை பவுன்ஸராக வீசுகிறார் பாலாஜி. அதை அடிக்கின்றார் வி.ஆர்.வி.சிங். டோனி ஓடிச் சென்று பிடியெடுக்க ஐ.பி.எல். தொடரின் முதல் 'ஹட்ரிக்' சாதனையைப் படைத்தார் பாலாஜி.

# ஹர்பஜனின் முகத்திரை கிழிந்துவிட்டது!

## பொண்டிங் கடும் விமர்சனம்

மெல்போர்ன், மே 12

"சகவீரர் சிறிசாந்த் கன்னத்தில் அறைந்த விவகாரத்தில் இருந்து ஹர்பஜன் இன்னும் திருந்தவில்லை என்பது தெளிவாகிறது. அவரது முகத்திரை தற்போது கிழிந்துவிட்டது."

- இவ்வாறு கடுமையாக விமர்சித்திருக்கின்றார் ஆஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கி பொண்டிங்

மொகாலியில் நடந்த ஐ.பி.எல். தொடரின் 10ஆவது லீக் போட்டியில் யுவராஜின் பஞ்சாப் அணி, மும்பை இந்தியன்ஸ் அணியை வீழ்த்தியது. இப்போட்டி முடிந்ததும் பஞ்சாப் அணியின் சிறிசாந்த் கைகுலுக்க வர, ஆத்திரமடைந்த ஹர்பஜன், அவரது கன்னத்தில் ஓங்கி ஒரு அறை கொடுத்தார். இது தொடர்பாக ஹர்பஜனுக்கு 11 ஐ.பி.எல். போட்டிகளில் பங்கேற்கத் தடை விதிக்கப்பட்டது. அடுத்து இந்தியக் கிரிக்கெட் சபையும்(பி.சி.சி.ஐ.,) நடவடிக்கை எடுக்க உள்ளது.

இந்நிலையில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்காக முதல் நான்கு போட்டியில் விளையாடிய ஆஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கி பொண்டிங், ஹர்பஜன் தொடர்ந்து தவறுகள் செய்து வருகிறார். சகவீரர் என்ற எண்ணம் கூட இல்லாமல் சிறிசாந்தை அறைந்த விவகாரம் மூலம் அவரது முகத்திரை கிழிந்துவிட்டது என்கிறார். இது குறித்து அவர் அளித்த பேட்டியில் கூறியிருப்பவை வருமாறு:-

"தன்னுடன் 20 டெஸ்ட் போட்டிகளுக்கு மேல் இணைந்து விளையாடிய சகவீரர் ஒருவரை ஹர்பஜன் அறைந்துள்ளார். இதிலிருந்து ஹர்பஜனை பற்றி அனைவரும் தெளிவாக அறிந்து கொள்ளலாம். அவர் மீண்டும் தவறு செய்துள்ளார்.

சிட்னி டெஸ்ட் போட்டியின் போது சைமண்ஸிடம் இனவெறியைத் தூண்டும் வகையில் நடந்துகொண்டார். இதில் அவருக்கு முதலில் மூன்று போட்டிகளில் பங்கேற்கத் தடைவிதிக்கப்பட்டது. பின்னர் அது போட்டிச் சம்பளத்தில் 50 சதவீதம் அபராதமாகக் குறைக்கப்பட்டது. இதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஒருநாள் போட்டிகளில் பந்துவீச தாமதமாகிவிட்டது என எனக்கு பல போட்டிளில் 30 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டது. ஹர்பஜனுக்கு அதை விடச் சற்றுக் கூடுதல் அபராதம் விதிக்கப்பட்டது அவ்வளவுதான். இவ்விரண்டுக்கும் வேறு எந்தப் பெரிய வித்தியாசமும் கிடையாது. "

- இவ்வாறு பொண்டிங் தெரிவித்தார்.

# சுத்தமான குடிதண்ணீர் சுகாதார வசதிகள் இல்லாமல் சூறாவளியால் பாதிக்கப்பட்ட மியன்மார் மக்கள் தவிப்பு



யங்கூன், மே 12

நர்கிஸ் சூறாவளி அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட 15 இலட்சம் மியன்மார் மக்கள் சுத்தமான குடிதண்ணீர் இன்றியும் சுகாதார வசதிகள் இன்றியும் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றார்கள். தொற்று நோய்கள் பரவுவதற்கான அறிகுறிகள் தோன்றியுள்ளன. இந்நிலை நீடிக்குமானால், உயிரிழப்புக்கள் மேலும் அதிகரிக்கும் என்று மனிதாபிமான நிவாரண உதவி நிறுவனங்களில் ஒன்றான 'ஒக்ஸ்பாம்' அபாய எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அத்துடன் மேலும் பல நிவாரண உதவி நிறுவனங்கள் அவசர உதவிகளை அதிகரிக்குமாறு சர்வதேச நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளன.

நர்கிஸ் சூறாவளியால் பாதிக்கப்பட்ட மியன்மார் மக்களுக்கு உடனடி அவசர நிவாரண உதவிகள் தேவை. இந்த உதவிகள் அலட்சியப்படுத்தப்பட்டால், அவர்கள் சொல்லொணா பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேரிடும் என மனிதாபிமான நிவாரண உதவி முகவர் நிறுவனங்கள் கூட்டு எச்சரிக்கை விடுத்துள்ளன.

'பாதிக்கப்பட்ட அனைவரையும் உதவிகள் பரந்த அளவில் சென்றடையவில்லை. நிவாரண உதவிகளை பகிர்ந்தளிப்பதற்காக முன்வந்துள்ள வெளிநாட்டு மனிதநேயத் தொண்டர்களை மியன்மாருக்குள் அனுமதிக்கவும் இராணுவ ஆட்சி இன்னும் முன்வரவில்லை.' - இவ்வாறு கவலை தெரிவித்துள்ளது சர்வதேச மீட்புக் குழு.

நர்கிஸ் சூறாவளி அடித்து எட்டு நாள்கள் கடந்துவிட்டன. எனினும், பாதிப்புக்குள்ளாகி பரிதவிக்கும் மக்களில், கால்வாசிப் பகுதியினருக்கு மட்டுமே நிவாரண உதவிகள் கிட்டியுள்ளன. ஏனையோர் உதவிகளை எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கின்றனர் என ஐ.நா. மதிப்பீடு செய்துள்ளது. இதனால் மேலும் விபரீதங்கள் விளையலாம் எனவும் சர்வதேச மீட்புக் குழு எச்சரிக்கை செய்துள்ளது.

**பெரும் மனிதப் பேரழிவு இடம்பெறலாம் என அச்சம்.**

மியன்மாரில் பாரிய மனித பேரழிவு ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் எம்மிடையே தலைதூக்கியுள்ளது. அப்படியாயின் அது சூறாவளியை விட அதிஉக்கிரமுடையதாக இருக்கும். சுகாதார சீர்கேட்டின் பேரழிவாக அமையும் என பிரிட்டனைத் தலைமையகமாகக் கொண்ட 'ஒக்ஸ்பாமின்' கிழக்காசியப் பணிப்பாளர் சாரா அயர்லாண்ட் தனது எச்சரிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

படுமோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்தோருக்கு உடனடியாக உணவு, உறைவிடம், மருத்துவ உதவி ஆகியவை தேவை எனக் குறிப்பிட்டுள்ள ஐ.நா., 18 கோடி 70 லட்சம் டொலர்களை உதவிப் பணிகளுக்காக சர்வதேச சமூகத்திடம் கோரியுள்ளது.

விநியோகத்துக்கான உணவுப் பண்டங்கள் இடைக்கிடையே வந்தவண்ணமுள்ளன. எனினும், குறிப்பிட்ட பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிவாரணப் பண்டங்கள் போதுமானவையாக இல்லை என ஊடகவியலாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

# துருக்கி விமானத் தாக்குதல் 19 குர்திஷ் போராளிகள் பலி

ஹக்கரி, மே 12

ஈராக்கிய - ஈரானிய எல்லைகளை ஒட்டி அமைந்துள்ள தென் - கிழக்கு துருக்கிய மாகாணமான ஹக்கரியில் துருக்கிய விமானப் படை மேற்கொண்ட வான்வழித் தாக்குதல்களில் 19 குர்திஷ் தீவிரவாதிகள் கொல்லப்பட்டார்கள் என இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பி. கே.கே. என்னும் குர்திஷ் தீவிரவாத அமைப்பின் போராளிகள் நடத்திய தாக்குதல்களுக்குப் பதிலடி கொடுக்கும் பொருட்டே வான்வழித் தாக்குதல்களில் நடத்தப்பட்டது என்றும் தங்கள் தரப்பில் இரு இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள் என்றும் இராணுவ வட்டாரம் குறிப்பிட்டுள்ளது.

பி.கே.கே. குர்திஷ் அமைப்பு 1984 ஆம் ஆண்டு முதல் தென் - கிழக்கு துருக்கிக்கு சுய நிர்ணய உரிமை கோரி, ஆயுதப் போராட்டம் நடத்தி வருகின்றது. இதன் போராளிகளுக்கும் இராணுவத்துக்குமிடையே மூண்டு வந்துள்ள மோதல்களில் 30 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் இதுவரை பலியாகியுள்ளனர்.

# பெரும் சத்தத்துடன் விளம்பரங்கள் இங்கிலாந்து 'ரிவி' க்களில் தடை

லண்டன், மே 12

தொலைக்காட்சி ஒளிபரப்புக்களில் அலறும் விளம்பரங்களுக்கு தடைவிதிக்க பிரிட்டன் முடிவு செய்துள்ளது.

நிகழ்ச்சிகளின் இடையே ஒளிபரப்பாகும் வர்த்தக விளம்பர நேரத்தில், திடீரென பெரிய அலறுடன் விளம்பரங்கள் கருத்தைக் கவர ஒளிபரப்பப்படுகின்றன என்று பலரும் தெரிவித்தனர். அதைத் தடுக்கவும் அரசிடம் முறையிட்டனர். இவ்வாறு பெரும் ஒலியுடன் ஒளிபரப்பாகும் விளம்பரங்களுக்குத் தடை விதித்துள்ள பிரிட்டன், புதிய வழிமுறைகளை நடைமுறைப்படுத்தி உள்ளது. இதன்படி தொலைக்காட்சி ஒளிபரப்புகளில் வழக்கமாக இடம்பெறும் நிகழ்ச்சிகளின் போது எந்தளவுக்கு ஒலி உள்ளதோ, அதே அளவிற்கு விளம்பரத்தின் ஒலி அதிர்வுகளும் இருக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் கூடுதல் ஒலியுடன் விளம்பரங்களை ஒளிபரப்பக் கூடாது என்று உத்தரவிட்டுள்ளது. உடனடியாக இந்த உத்தரவுகளை அமுல்படுத்தவும் முடிவாகியுள்ளது.

# ஹிலாரியைத் துணை அதிபர் வேட்பாளராக நிறுத்துவேன்!

## சொல்கிறார் ஒபாமா

வாஷிங்டன், மே 12

ஜனாதிபதி வேட்பாளருக்கான தேர்தலில் தான் வெற்றிபெற்றால் துணை ஜனாதிபதியாகப் போட்டியிடும் வேட்பாளராக ஹிலாரியை நிறுத்துவார் என்று பராக் ஒபாமா அறிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் வேட்பாளராகத் தேர்ந்து எடுப்பதற்கான போட்டியில் ஒபாமாவும் ஹிலாரியும் இன்னும் பந்தயத்தில் இருக்கிறார்கள். ஹிலாரியை விட ஒபாமாவுக்குத் தான் அதிக வாய்ப்பு இருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில் ஜனாதிபதி வேட்பாளருக்கான தேர்தலில் தான் வெற்றிபெற்றால் துணை ஜனாதிபதியாகப் போட்டியிடும் வேட்பாளராக ஹிலாரியைத் தேர்ந்து எடுப்பார் என்று ஒபாமா கூறியிருக்கிறார். அவர் தொலைக்காட்சிச் சேவைக்கு அளித்த பேட்டியில் துணை ஜனாதிபதியாக இருப்பதற்கு அவர் முழுத் தகுதி படைத்தவர் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. ஹிலாரி ஓய்வில்லாது உழைக்கக் கூடியவர், புத்திசாலி, திறமையானவர் என்று குறிப்பிட்டார்.

இதேவேளை, ஜனாதிபதி வேட்பாளராக ஒபாமாவை நிறுத்துவதற்கான ஆதரவு ஜனநாயகக் கட்சி உறுப்பினர்களிடையே அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஜனநாயகக் கட்சி உறுப்பினர்களை உள்ளடக்கிய விசேட பிரதிநிதிகளின் (சுப்பர் டெலிகேற்ஸ்) ஆதரவு முதன் முறையாக ஹிலாரியைவிட ஒபாமாவுக்கு கூடுதலாகக் கிடைக்கப்பெற்றுள்ளது. இதுவரை ஒபாமா 276 சுப்பர் பிரதிநிதிகளையும் ஹிலாரி 271.5 சுப்பர் பிரதிநிதிகளையும் சேர்த்துள்ளனர்.

இன்னும் ஓரிரு வாரங்களில் ஜனநாயகக் கட்சி ஜனாதிபதி வேட்பாளர் இறுதி செய்யப்படுவர் என்று தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் வாக்குகளே அதிக எண்ணிக்கையில் மோசடி!

## சான்றுகளுடன் நிரூபிப்பாராம் ரவூப் ஹக்கீம்

கொழும்பு,மே.12

கிழக்கு மகாண சபைத் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளே பெருமளவில் மோசடி செய்யப்பட்டுள்ளன எனக் குற்றம் சாட்டியுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், இந்த தேர்தல் முடிவுகளைத் தாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லையெனவும் தெரிவித்துள்ளார்.

அரசால் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைக்கு எதிராகப் போராடி தேர்தல் மோசடியை குறைவடையச் செய்வதற்கான துணிச்சல் திருகோணமலை மக்களிடம் காணப்பட்டது என மேலும் தெரிவித்துள்ள அவர், எனினும் மட்டக்களப்பு, அம்பாறையில் அரசால் இலகுவாக மோசடிபுரிய முடிந்தது என்றும், தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கள்ள வாக்களிப்பில் ஈடுபட்டனர் என்றும் தெரிவித்துள்ளார்.

பிள்ளையான் குழுவுடன் இணைந்து அரசு எவ்வாறு மோசடியில் ஈடுபட்டது என்பதை சான்றுகளுடன் தாம் நிரூபிக்கவுள்ளார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

**வடக்கின் களமுனைகளில் யுத்தத்தை தீவிரப்படுத்தக் கிடைத்த ஆணை**

இதேவேளை, பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதற்கான அரசின் தந்திரரோபாயம் குறித்துத் தாங்கள் நம்பிக்கை கொண்டிருப்பதையே மக்களின் ஆணை புலம்படுத்துவதாக கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

வடபகுதியின் காடுகளுக்குள் முடக்கப்பட்டுள்ள புலிகளுக்கு எதிராக யுத்தத்தை தீவிரப்படுத்துவதற்கான புதிய ஆணையை தேர்தல் முடிவுகள் வழங்கியுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மற்றுமொரு அமைச்சரான ஜாதிக ஹெல உறுமயவின் சம்பிக ரணவக்க கிழக்கு மாகாண சபைத் தேர்தல்களில் வெற்றி மேற்குலகு சார்பு ஈழவாதிகளின் கனவுகளைச் சிதறடித்துள்ள எனக் குறிப்பிட்டுள்ளார். (உ)

## யாழ்.போதனா வைத்தியசாலையின் முன்னாள் பணிப்பாளர் நவமலர் காலமானார்



யாழ்ப்பாணம்,மே12

யாழ்.போதனா வைத் தியசாலையின் முன்னாள் பணிப்பாளரும் தெல்லிப்பழை மாவட்ட வைத்திய அதிகாரியுமான வைத்திய கலாநிதி செல்வி நவமலர் கனகரத் தினம் நேற்றுக் காலமானார். அவருக்கு வயது 70.

நீண்டகாலம் சுகவீனம் முற்றிருந்த அவர் நேற்று இரவு மரணமானார்.

1990 இல் நெருக்கடியான காலத்தில் மானிப்பாயிலும் 1995 இன் பெரும் இடம் பெயர்வின் போது பருத்தித்துறையிலும் யாழ்.போதனா வைத்தியாசலையை இயக்குவதற்கு ஏற்பாடு செய்து குடாநாட்டு மக்களுக்குப் பெரும் தொண்டாற்றியவர்.

இவர் தெல்லிப்பழை புற்றுநோய்ச் சிகிச்சை நிலையத்தை மீண்டும் இயக்குவதற்கும் பெரும் பங்காற்றினார்.

சுதுமலை புவனேஸ்வரி அம்மன் ஆலய நிர்வாக சபையின் அங்கத்தவராக இருந்த இவர் மருதனார்மடத்தில் இயங்கும் 'கேன்' புற்றுநோய் காப்பகத்தில் அங்கத்தவராக இருந்தும் சமூகப்பணி புரிந்தார். (அ-1)

## யாழ். மாவட்ட பாடசாலைகளின் மெய்வன்மை போட்டி

யாழ்ப்பாணம்,மே12

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக் கிடையிலான மென்வன்மைப் போட்டிகளுக்கான நிகழ்ச்சிநிரல் மற்றும் இலக்கங்களை இன்று முதல் வலயங்களில் பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது.

யாழ்.வலயத்துக்கான நிகழ்ச்சி நிரல் மற்றும் இலக்கங்களை இன்று மு.ப. 10 மணிக்கு முத்துத்தம்பி வித்தியாலயத்தில் பெற்றுக்கொள்ளுமாறு விளையாட்டுச் செயலாளர் கேட்டுள்ளார். (1)

### சட்ட நடவடிக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெற்றிபெற்றிருக்கின்றது.

இது தொடர்பாக நாம் எழுத்து மூலம் தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்துள்ளோம். வாக்குச்சாவடிகளில் வன்முறைகள் இடம் பெற்றமையை வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்கள் உறுதிப்படுத்தாவிட்டால் அதற்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது.

வன்முறைகள் இடம்பெற்ற வாக்குச்சாவடிகளுக்குப் பொறுப்பாக இருந்தவர்கள் அரசின் கைக்கூலிகள் என்றால் அந்த வன்முறைச் சம்பவங்களை அவர்கள் உறுதிப்படுத்த மாட்டார்கள்.

இருப்பினும், தேர்தல் மோசடிக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள நாம் முடிவெடுத்துள்ளோம். அதேபோல் எவ்வாறு இந்த மோசடிகள் இடம்பெற்றன என்பதை நாம் மக்களுக்குத் தெளிவுபடுத்தும் வேலைத் திட்டம் ஒன்றையும் முன்னெடுக்கவுள்ளோம்.

இன்று(அதாவது நேற்று) காலை நாம் தேர்தல் கண்காணிப்புக்குழுக்களைச் சந்தித்துப் பேசினோம். இந்தத் தேர்தல் ஊழல் மோசடிகள் நிறைந்தது என்றே கண்காணிப்புக் குழுக்கள் தெரிவிக்கின்றன. - என்றார். (சி)

### ஹிஸ்புல்லாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதல்நிலை பெற்றிருக்கின்றார். எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா 3ஆவது இடத்தையே பெற்றார்.

ஆளும் தரப்பின் வேட்பாளர் பட்டியலில் பிள்ளையான் 41 ஆயிரத்து 936 வாக்குகளையும் அடுத்து ஜே.எஸ்.மொகமட் 36 ஆயிரத்து 419 விருப்பு வாக்குகளையும், எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா 35 ஆயிரத்து 949 விருப்பு வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட முதன்மை வேட்பாளரும் முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளருமான பஷீர் சேகுதாவூத் 23 ஆயிரத்து 342 விருப்பு வாக்குகளைப் பெற்று தனது கட்சி சார்பாக முதலிடத்தைப் பிடித்துள்ளார். இந்தப் பட்டியலில் போட்டியிட்ட வெள்ளைத்தம்பி அமீர் டீன் 12 ஆயிரத்து 157 விருப்பு வாக்குகளைப் பெற்று 2ஆம் இடத்தையும், ஐ.தே.க. வேட்பாளர்களான அரசரட்ணம் சசிதரன் 11 ஆயிரத்து 21 விருப்பு வாக்குகளையும், ரி.ஏ.மாசிலாமணி 8 ஆயிரத்து 42 விருப்பு வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

### வங்காலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டில் தங்கியிருந்த நாகம்மா (வயது - 76) என்ற வயோதிபப் பெண் காயமடைந்துள்ளார் என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

அன்றுஇரவுஎட்டுமணியளவில்சிகிச்சைக்காக இந்த வயோதிப மாது மன்னார் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்றும், இந்தத் தாக்குதலை விடுதலைப் புலிகளே மேற்கொண்டனர் என்றும் படைத் தரப்பில் கூறப்பட்டது. (சி)

### புலிகளிடம் ஐந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிடிக்கப்பட்டிருந்தன.

இதனிடையே முல்லைத்தீவில் உள்ள ஓடுபாதையையும் அவர்கள் புனரமைத்து வருகின்றனர் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

எனவே, விடுதலைப் புலிகள் ஒன்றுக்கும் அதிகமான விமான ஓடுபாதைகளை பயன்படுத்தி வருகின்றனர். கடந்த காலத்தில் புலிகளால் நடத்தப்பட்ட ஐந்து விமானத் தாக்குதல்களுக்கும் இரணைமடு ஓடுபாதையையே பயன்படுத்தியிருந்ததற்கான ஆதாரங்கள் உள்ளன.

முல்லைத்தீவில் உள்ள ஓடுபாதை மணலாறுக்கு அண்மையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-சி)

(மற்றொரு செய்தி மூன்றாம் பக்கத்தில்)

### கிழக்கு மாகாணத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆளும் தரப்பு முன்னணிக்கு வந்தது. அந்த மாவட்டத்தில் எஞ்சிய ஐந்து ஆசனங்களில் நான்கு, அரசுக்கூட்டமைப்புக்குக் கிடைத்தன. மற்றைய ஆசனத்தை ஜே.வி.பி. சுவீகரித்தது.

**மட்டக்களப்பு மாவட்டம்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டக்களப்பு, பட்டிருப்பு, கல்குடா ஆகிய மூன்று தொகுதிகளிலும் ஆளும் தரப்பு அமோக வெற்றியீட்டி ஆறு ஆசனங்களைச் சுவீகரித்தது.

ஐ.தே.கட்சிக்கு நான்கு இடங்களும், முக்கூட்டு தமிழர் அமைப்புக்கு ஓரிடமும் கிடைத்தன.

**அம்பாறை மாவட்டம்**

கடும் போட்டி நிலவிய அம்பாறை மாவட்டத்தில் கல்முனைத் தொகுதியில் மட்டும் ஐ.தே.கட்சி - ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூட்டு வென்றது.

அம்பாறை, பொத்துவில், சம்மாந்துறை ஆகிய தொகுதிகளில் ஆளும் தரப்பு வெற்றியீட்டி அந்த மாவட்டத்தின் 14 ஆசனங்களில் எட்டைக் கைப்பற்ற, எஞ்சிய இடங்கள் ஐ.தே. கட்சி தலைமையிலான கூட்டணிக்குச் சென்றன.

இத் தேர்தலில் போட்டியிட்ட ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மொத்தம் 5 ஆயிரத்து 418 வாக்குகளைப் பெற்றது. எனினும், அதற்கு ஓர் ஆசனமும் கிடைக்கவில்லை.

மூன்று மாவட்டங்களிலும் மொத்தமாக அதிக ஆசனங்களையும், வாக்குகளையும் பெற்ற ஆளும் தரப்புக்கு போனஸ் இடங்களாக இரண்டு வழங்கப்பட்டன.

ஆக, கிழக்கு மாகாண சபையில் இனி ஆளுங் கூட்டமைப்பில் 20 பேரும், ஐ.தே. கட்சி தலைமையிலான கூட்டணியின் சார்பில் 15 பேரும், ஜே.வி.பி மற்றும் முக்கூட்டுத் தமிழ்க் கட்சிகளின் சார்பில் தலா ஒருவரும் அங்கம் வகிப்பர். (உ)

### உடன் நாடாளு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுத் தெரிவித்தார்.

நாடாளுமன்றம் இம்மாதம் 6,7,8,9 ஆகிய திகதிகளில் கூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் ஆறாம் திகதி மட்டுமே அது கூடியது.

ஆறாம் திகதி நாடாளுமன்றம் கூடி அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதம் நீடிக்கும் பிரேரணையை நிறைவேற்றிய கையோடு - அன்றிரவே - நாடாளுமன்றை ஜூன் 5ஆம் திகதி வரை இடைநிறுத்தி ஜனாதிபதி பிரகடனம் ஒன்றை வெளியிட்டார்.

ஜூன் மாதம் [illegible]ஆம் திகதி ஜனாதிபதியின் தலைமையிலேயே நாடாளுமன்றம் கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நடந்து முடிந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தல் ஊழல், மோசடிகள் நிறைந்தது என்றுகூறி அது பற்றிப் பேசுவதற்காக உடனடியாக நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு சபாநாயகரிடம் வேண்டுகோள் விடுக்கும் திட்டத்தில் ஐ.தே. கட்சி உள்ளது. (அ-சி)

### முதலமைச்சர் பதவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"இந்த விடயம் தொடர்பில் நாங்கள் எல்லோரும் இதயசுத்தியுடன் ஒன்றுகூடி கலந்தாலோசித்த பிற்பாடு - காலத்திற்கேற்றவாறு முடிவு எடுப்போம். அந்த அடிப்படையில் இதில் நிச்சயமாக எங்களுக்குச் சார்பான தொரு முடிவு வரும் என்று நாங்கள் காத்திருக்கின்றோம்" - என்றும் பிள்ளையான் குறிப்பிட்டார்.

பி.பி.ஸி. தமிழோசைக்கு கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் தொடர்பாக நேற்றிரவு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"தேர்தலில் வன்முறைகள் மற்றும் முறைகேடுகள் என்பன நடந்தன எனக்கூறி சில இடங்களில் மறுவாக்குப்பதிவு நடத்தவேண்டும் எனக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு மறுவாக்குப் பதிவு இடம்பெறுமானால் அதை நீங்கள் முழு மனதோடு ஏற்றுப் பங்கேற்பீர்களா என்று பி.பி.ஸி. செய்தியாளர் கேட்டதற்கு,

"என்னையும் எனது கட்சியையும் பொறுத்தமட்டில் அப்படி முறைகேடுகள் நடந்ததாகத் தெரியவில்லை. அப்படி நடந்திருந்தால் ஒரு சாரார்தான் அதிகப்படியான ஆசனங்களைப் பெற்றிருக்கவேண்டும். எதிர்பார்த்ததைவிட எதிர்க்கட்சியினர் அதிக ஆசனங்களைப் பெற்றிருப்பதை மகிழ்ச்சியான விடயமாகத்தான் நான் பார்க்கின்றேன். இதனால், இங்கு மற்றுமொரு தேர்தல் நடத்துவதற்கான வாய்ப்புகள் இல்லை" - என்றார். (அ-சி)

### பயங்கரவாதத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படைகளால் மீளக் கட்டியெழுப்பப்பட்டுள்ளன.

"பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதன் மூலமாக சமாதானத்தைக் கட்டி எழுப்புதவற்கும், நாட்டில் ஜனநாயகத்தையும், அபிவிருத்தியையும் வலுப்படுத்துவதற்கும் கிழக்கு மக்கள் தெட்டத் தெளிவான ஆணையை வழங்கியுள்ளார்கள் என்பதை நான் குறிப்பிட்டேயாகவேண்டும்" - என்று உள்ளது. (அ-உ)

### பொருளியல் ஆசிரியர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனது மனைவிக்கு வரதராஜன் [illegible]வித்துள்ளார் என்று கூறப்படுகிறது.

இதன் பின்னர் முற்பகல் 11.30 [illegible]யளவில் பொலிஸ் சீருடையில் 7 பே[illegible] வரதராஜனின் வீட்டுக்குச் சென்றுள்ளனர்.

அவர்கள் மேல் மாடிக்குச் சென்று வரதராஜன் கீழே நிற்கின்றார் என்றும் வீட்டைச் சோதனையிடப் போகின்றனர் என்றும் தெரிவித்துள்ளனர்.

வீட்டில் நின்ற வரதராஜனின் மனைவியும் அவரின் சகோதரரான சிறிதரனும் கீழே வரதராஜனைப் பார்க்க வந்தபோது, அவர்கள் இருவரையும் இழுத்து வாகனத்துக்குள் தள்ளிய சீருடையினர் அங்கிருந்து சென்றனர்.

இவர்களில் வரதராஜனின் மனையியை நுகேகொடையில் அவர்கள் இறக்கிவிட்டு 100 ரூபாவைக் கொடுத்து தெஹிவளைப் பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு தெரிவித்துள்ளனர். சிறிதரனை மட்டும் அவர்கள் கொண்டு சென்றனர்.

வரதராஜனின் மனைவி வெள்ளவத்தைப் பொலிஸ் நிலையத்தில் இது குறித்து முறைப்பாடு செய்துள்ளார்.

வெள்ளவத்தைப் பொலிஸ் நிலையத்திலிருந்து வருகின்றனர் எனத் தெரிவித்தே அவர்கள் தமது வீட்டுக்கு வந்தனர் என வரதராஜனின் மனைவி தெரிவித்துள்ளார்.

வெள்ளவத்தைப் பொலிஸ் நிலையத்தில் மனைவி இவ்வாறு முறையிட்டபோது தமது நிலையத்திலிருந்து எவரும் இப்படி அவர்களின் வீட்டுக்கு வரவில்லை என்று அங்குள்ள பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வரதராஜன் குடும்பத்தினர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)


**IBS சுண்டுக்குளி**

கலை, வர்த்தக மாணவர்களுக்கு | வர்த்தக மாணவர்களுக்கு

பொருளியல் K. பிரதீபன் | கணக்கீடு P. பகீரதன்

பொருளாதார வளர்ச்சி — A/L 2008 — முதலீட்டு தீர்மானம்

பணம், வங்கி.. — A/L 2009 — வங்கிக்கு இணக்கக் கூற்று

பிரிவு 1 சந்தை போருளாதாரம் பிரிவு 2 பொருளியல் அறிமுகம் — A/L 2010 — பிரிவு 1 தனி வியாபார முடிவு கூ/கு பிரிவு 2 இரட்டைப் பதிவு

★ இன்றும் அனுமதிகளை பெறலாம்
★ நேர அட்டவணை அலுவலகத்தில்.

**மீண்டும் ஓர் புதிய பிரிவு!**

**O/L DAY CLASS**

ஆரம்பம் - 14.05.2008 (wed - 8.00 a.m.)

★ இவ்வருடத்தின் இறுதிப் பிரிவுக்கான அனுமதிகள் 16.05.2008 வரை மட்டுமே வழங்கப்படும்.

**நாவலர்**

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

**COM.MATHS**

A/L 2010 திரிகோண கணிதம் (Mon, Fri - 6.30 - 7.30) ஆரம்பம்:-12.05.2008 (Mon - 6.30 a.m.)

A/L 2009 நேர்கோடு ( Fri - 4.30 p.m.) ஆப்பு (Thu-3.30 pm)

By:- P.Atheesan.

NAVALAR Jaffna.

**மணிவிழா தம்பதிகளைப் பாராட்டி வாழ்த்துகிறோம்**

பிள்ளைகளின் உயர்வுக்காக இன்றும் பாடுபட்டுக் கொண்டிருக்கும் எம்பெற்றோரான

**திரு.திருமதி நடேசமூர்த்தி-நாகேஸ்வரி**

தம்பதிகள் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்

வாழ்த்துபவர்:
N.ஜெயசுரேஷ் B.Com,
மனைவி J.வித்தியா HNDM.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.05.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org